Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | கார்த்திகை-02 | 17-11-2004 | புதன்கிழமை | ஓசை -273




# சனாதிபதியை மட்டும் நம்பி பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்ல முடியாது!

## சகல கட்சிகளையும் இணைத்து தீர்க்கமான முடிவை கோரினோம் என்கிறார் சு.ப.தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

**சமாதான முயற்சிகளை அரசாங்கத்தில் பங்கேற்கின்ற ஜே.வி.பி உள்ளிட்ட கூட்டுக்கட்சிகள் எதிர்க்கின்றன. இந்தச் சூழ்நிலையில் சனாதிபதியை மட்டும் நம்பிக்கொண்டு நாங்கள் செல்லமுடியாது. எனவே அரசாங்கத்திலுள்ள ஏனைய கட்சிகளையும் இணைத்து ஒரு தீர்க்கமான முடிவை எடுத்து அதனைத் தெளிவுபடுத்த வேண்டும் என சனாதிபதி சந்திரிகாவிடம் நோர்வே வெளிவிவகார அமைச்சர் மூலமாக வெளிப்படுத்தினோம்.**

இவ்வாறு நேற்றுக் கிளிநொச்சியில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பின் பின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஊடகவியலாளரிடம் தெரிவித்தார்.

மேற்படி சந்திப்பு கிளிநொச்சியில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் நடைபெற்றது.

தமிழீழ அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மேற்படி சந்திப்

(12ஆம் பக்கம் பார்க்க)



## பேச்சுக்கள் முன்னெடுக்கப்படாமைக்கு அடிப்படைக்காரணம் அரசாங்கமே!

### -தேசியக்கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன்-

(கிளிநொச்சி)

சமாதானப் பேச்சுவார்த்தையின் மூலமாக தமிழ் தேசிய பிரச்சினைக்கு ஒரு நியாயமான நிரந்தரமான தீர்வு காணப்படவேண்டும் என்பதில் நாங்கள் எல்லோரும் உறுதியாக இருக்கின்றோம். தமிழீழ விடுதலைப்புலிகளும் உறுதியாக இருக்கின்றார்கள் ஆனால், இந்த சமாதானப் பேச்சுவார்த்தை தற்போது முன்னெடுக்க முடியாமல் இருப்பதற்கு அடிப்படைக் காரணம் அரசு தரப்பில் தான் இருக்கின்றது. ஆனபடியால் இந்த விடயத்தில் அனுசரணையாளரும் சர்வதேச சமூகமும் இந்த நாட்டில் வாழ்கின்ற மக்களும் கூடுதலான அக்கறை செலுத்தி ஒரு ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தை இடம் பெற வேண்டிய ஒரு நிலைமை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் எங்களுடைய கூட்டான கருத்து

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஹொவ்டே-தமிழ்ச்செல்வன் இன்று சந்திப்பு

யுத்தநிறுத்தக் குழுத் தலைவர் டொன்புரூவ்ஹொவ்டே இன்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து வருகை தரும் டொன் புரூவ்ஹெவ்டேயவர்கள் இன்று பிற்பகல் 2.00 மணியளவில் விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்து பேச்சுக்களை நடத்தவுள்ளதாக விடுதலைப்புலிகளின் சமாதான செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ச)

## அ'புரத்தில் பயணிகள் வான் மீது படையினர் துப்பாக்கிச் சூடு

### –கோண்டாவில் வாசி பலி

(வவுனியா செய்தியாளர்)

அநுராதபுரத்தில் படையினரின் சோதனைச் சாவடியில்சோதனையை முடித்துப் புறப்பட்ட வாகனம் மீது படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் வானின் பின் இருக்கையில் இருந்தவர் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை 3.00 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கோண்டாவில் வாசியான இராமலிங்கம் சுப்பிரமணியம் (வயது 60)என்பவரே பலியானவராகும்.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது.

ஜேர்மனியில் இருந்து இருபது வருடங்களின் பின் தனது தந்தையைப் பார்ப்பதற்காக தாயகம் திரும்பிய மகளை அழைத்து வருவதற்காகச் சென்று தனது மகளையும், மருமகனையும், பேரப்பிள்ளைகளையும் யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வந்த வழியிலேயே பரிதாப மரணம் ஏற்பட்டுள்ளது.

வான் ஒன்றில் வந்த இவர்களை அனுராதபுரத்தில் உள்ள யாழ்ப்பாணச் சந்தி சோதனை நிலையத்தில் வழிமறித்த படையினர் சோதனையிட்ட பின் இவர்களைத் தொடர்ந்து செல்ல அனுமதித்தனர். வாகனம் புறப்பட்டு

(12ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக புலிகளுக்கு சந்திரிகா காலக்கெடு

### –இம்மாதமுடிவிற்குள் தெரிவிக்க வேண்டுமாம்

தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதான பேச்சுவார்த்தை தொடர்பாக தமது இறுதி நிலைப்பாட்டை இம் மாதத்திற்குள் அறிவிக்க வேண்டும் என சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளார்.

சுயாதீன தொலைக்காட்சிக்கு நேற்றிரவு அளித்த விசேட பேட்டியில் இது பற்றி குறிப்பிட்டுள்ளார். அந்தப் பேட்டியில் அவர் தெரிவித்த சில விடயங்கள் வருமாறு,

விடுதலைப் புலிகள் அடிக்கடி பல்வேறு காரணங்களைக் கூறி பேச்சுவார்த்தைக்கு வருவதற்கு பின் நிற்காமல் பேச்சுவார்த்தைக்கு முன்வர வேண்டும். பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான சகல ஏற்பாடுகளும் நடவடிக்கைகளும் அரசாங்கத்தினால் செய்யப்பட்டுள்ளது.எனவே பேச்சுவார்த்தைக்கு வர வேண்டிய பொறுப்பு விடுதலைப் புலிகளைச் சார்ந்தது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சுவார்த்தை விடயத்தில் நிபந்தனையுடனேயே அரசுக்கு ஆதரவு

### -ஐ.தே.க.பாராளு. உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ்

(கொழும்பு)

இரண்டு நிபந்தனைகளுடனேயே சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு தமது கட்சி அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுக்கும் என் முன்னாள் அமைச்சரும் தற்போதைய ஐ.தே.க. பாராளுமன்ற அமைச்சருமான ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விபரிக்கையில் உடனடியாக சமாதானப் பேச்சுக்கள் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின்படி ஆரம்பிக்கப்படவேண்டும். மற்றும் சமாதான பேச்சுக்கள் தொடர்பாக அரசாங்க கட்சிகளுக்குள் உடன்பாடு ஒன்று ஏற்படவேண்டும். இவையிரண்டையும் செயற்படுத்தும்போது மாத்திரமே தாம் அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கமுடியும் எனத் தெரிவித்தார். சனாதிபதி, காவல் துறை மற்றும் நிதித்துறையை விமர்சித்தமை காரணமாக அந்த இரண்டு துறைகளுக்கும் மக்கள் மத்தியில் இருந்த முழு நன்மதிப்பையும் இழக்கச் செய்துள்ளார். என்றும் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.



## மாவீரர் நாள் நவம்பர் -27

**"எமக்கு ஒரு நாடுவேண்டும். எமது மக்களுக்கு விடுதலை வேண்டும். எமது இனம் சுதந்திரமாக வாழ வேண்டும்-என்ற ஆக்ரோசமான இலட்சிய வேட்கையுடனேயே மாவீரர்கள் களத்தில் விழுகின்றார்கள்; எனவே எமது மாவீரர்கள் ஒவ்வொருவரது சாவும் எமது நாட்டின் விடுதலையை முரசறையும் வீர சுதந்திரப் பிரகடனமாகவே சம்பவிக்கின்றது.".**

**தமிழீழத் தேசியத்தலைவர்**
**மேதகு வே. பிரபாகரன் அவர்கள்.**

## பாகிஸ்தான் பிரதமர் 27இல் கொழும்பு விஜயம்

(கொழும்பு)

பாகிஸ்தானின் பிரதமர் எதிர்வரும் 27 ஆம் திகதி சிறிலங்காவிற்கு விஜயம் செய்யவுள்ளார். அவர் சிறிலங்காவில் சனாதிபதி உட்பட்ட தலைவர்களைச் சந்திக்கவுள்ளார். தெற்காசிய ஒத்துழைப்பு நாடுகளின் தலைமை தற்சமயம் பாகிஸ்தானே கொண்டுள்ளது.இதன் அடிப்படையிலேயே இருதரப்பு உறவுகளின் அடிப்படையில் பாகிஸ்தான் பிரதமரின் விஜயம் அமையவுள்ளது. இதேவேளை எதிர்வரும் சனவரி மாதத்தில் நடைபெறவுள்ள மாநாட்டில் பங்களாதேஷ் தெற்காசிய ஒத்துழைப்பு அமைப்புகளின் தலைமை ஏற்கவுள்ளது.

# கிளி.பாரதி வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா







கிளிநொச்சி பாரதி வித்தியாலயத்தில் கடந்த 7 ஆம் திகதி இடம்பெற்ற பரிசளிப்பு விழாவில் கிளி.வலயக்கல்விப் பணிப்பாளர் உரையாற்றுவதையும், மாணவிகளின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம்.


# வீரவணக்கம்

## 11 ஆம் ஆண்டு நினைவலைகளில்

தாயின் மடியில் 26 - 07 - 1946



தாயக மண்ணில் 12 - 11 - 1993

தமிழீழ காவல்துறை உபபரிசோதகர்

**கமலானந்தன்**

**கணபதிப்பிள்ளை கமலானந்தன்**

நி.மு யாழ்.மாவட்டம்

**12.11.1993 அன்று சிறிலங்கா இராணுவத்தினரின் குண்டு வீச்சினால் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். இம்மாவீரருக்கும் இந்நாளில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

"தமிழீழ காவல்துறையினா"

(5281)



# சாவு அறிவித்தல்

## அமரர். சீ.இராசதுரை (துரை)

மட்டுவில் தெற்கை பிறப்பிடமாகவும் இல.09 குமரபுரம் பரந்தனை வசிப்பிடமாகவும் கொண்ட கிளி.அரசினர் நெற்பண்ணையின் வாகனச்சாரதியுமான சி.இராசதுரை அவர்கள் 16.11.2004 அன்று சாவடைந்துவிட்டார். அன்னார் காலம்சென்றவரான சின்னத்தம்பி,அன்னம்மா ஆகியோரின் மூத்தமகனும் அன்னலட்சுமியின் (இந்தியா) அன்புக்கணவரும், விஜயானந் (மாவீரர்) , மேஜர் எழில்கண்ணன்(வாகனப்பகுதி), விஜயசுதா (லண்டண்), விஜயசுதன் (இந்தியா)ஆகியோரின் அன்புத் தந்தையும், கந்தசாமியின் சகோதரனும், நடராசா, இரவீந்திரராசா (இராமநாதபுரம்) ஆகியோரின் ஒன்று விட்ட சகோதரனும் இராசேஸ்வரியின்(மட்டுவில்) மைத்துனரும் ஆவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் 17.11.2004 அன்று பி.ப 2.00மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பரந்தன் இந்து மயானத்தில் பூதவுடல் நல் அடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்,
சகோதரன்
(கந்தசாமி)

(4933)



உ
சிவமயம்





# புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்:-

நிகழும் மங்களகரமான தாரண வருடம் கார்த்திகை மாதம் 3ஆம் நாள் (18-11-2004) வியாழக்கிழமை காலை 10.45 மணிமுதல் 11.45 மணிவரையான, மகர லக்கினமும் திருவோண நட்சத்திரமும் கூடிய சுபவேளையில், எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற



## சுந்தர்சன்
## SUNDHARSON



என்னும் புதுக்கடையை ஆரம்பிக்கவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்

யாழ்வீதி, மானிப்பாய்.
T.P: 021-222-2751
Suntel: 4591569
Fax: 021-222-2751

உரிமையாளர்
சுந்தர்சன்

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பிதழாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

வணக்கம்

(சி-10742)


## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை கரவெட்டி, வேலைகளுக்கான

# கேள்வி அறிவித்தல்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் செயலாளரினால் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

01) கேள்விப் பத்திரங்கள் 2004.11.24ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கீழே குறித்த தொகையைச் செலுத்தி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

02) கேள்விப் பத்திரத்தில் ஒரு பிரதியை கடிதஉறையிலிட்டு அரக்கு முத்திரை வைத்து செயலாளர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இட்டு, இரண்டாம் பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் அவர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும். இரண்டு பிரதிகளையும் உரிய இடங்களில் 2004.11.25ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கிடையில் கிடைக்கச் செய்தல் ஒப்பந்தகாரரின் கடமையாகும்.

03) கேள்விகள் 2004.11.25ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

04) மேலதிக விபரங்களை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

| தொ. இல. | வேலை | இக்ராட் தரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் (ரூபா) | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப்பணம்(ரூபா) | மீளளிக்கப்படாத பெறுமதி சேர்வரி |
|---|---|---|---|---|---|
| 01) | துவாக்கட்டு இரும்பு மதவடி இணைப்பு வீதி | எம் 9அல்லது அதற்கு மேல் | 2,500/- | 500/- | 75/- |
| 02) | கப்பூது விராலி வீரகத்தி பிள்ளையார் கோவில் வீதி | எம் 8 அல்லது அதற்கு மேல் | 15,000/- | 500/- | 75/- |
| 03) | பூவற்கரை வைரவர் வீதி | எம் 9 அல்லது அதற்கு மேல் | 4,500/- | 500/- | 75/- |
| 04) | கீரிப்பல்லி மயான வீதி | எம் 9 அல்லது அதற்கு மேல் | 4,000/- | 500/- | 75/- |

**எ.எம். ஜோசெப்,**
செயலாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.

(சி-10619)

# அமெ.இல் கொலின்பவல் உட்பட நான்கு அமைச்சர்கள் இராஜினாமா

## புதிய வெளியுறவுத்துறை அமைச்சராக கண்டலீசா ரைஸ்

(வோஷிங்டன்)

**அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் கொலின் பவல் உட்பட நான்கு அமைச்சர்கள் தமது பதவிகளை இராஜினாமாச் செய்துள்ளனர். கடந்த வெள்ளிக்கிழமை அதிபர் ஜோர்ஜ் புஷ்சிடம் கொலின்பவல் தமது இராஜினாமாக்கடிதத்தை கையளித்துள்ளதாக வெளியுறவுத் துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.**

புஷ் அமைச்சரவையில் உள்ள கல்வி அமைச்சர் ராட் பெய்ஜ் வேளாண்துறை அமைச்சர் ஆன் வெனிமேன், விசைத்துறை அமைச்சர் ஸ்பென்சர் ஆப்ரகாம் ஆகியோரும் தமது பதவிகளை நேற்று முன்தினம் இராஜினாமா செய்துள்ளனர். ஏற்கெனவே வர்த்தக அமைச்சர் டொனால்ட் இவான்ஸும் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

முன்னாள் இராணுவ தளபதியான கொலின்பவல் கடந்த 4 ஆண்டுகளாக அதிபர் புஷ்ஷின் அரசில் வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்தார் அண்மையில் நடந்த அமெரிக்க அதிபர் தேர்தலில் புஷ் மீண்டும் வெற்றி பெற்றுள்ளார். எனினும் மேலும் 4 ஆண்டுகள் அமைச்சர் பதவியில் தொடர பவல் விரும்பவில்லை அதனால் அவர் இராஜினாமா செய்துள்ளார். கடந்த ஆண்டு டிசம்பரில் புராஸ்ட்ரேட் புற்றுநோய்க்காக அவர் சிகிச்சை பெற்றார். ஈராக் மீது படையெடுக்க புஷ் முடிவு செய்த போது அவருக்கு உறுதுணையாக இருந்தவர் பவல் இந்தியா-பாகிஸ்தான் இடையே நல்லுறவை ஏற்படுத்தும் முயற்சியிலும் அவர் ஈடுப்பட்டார். பவல் ஜோர்ஜ் புஷ்சுடன் சமீபகாலமாக இவருக்கு கருத்து வேறுபாடு ஏற்பட்டதாகவும் தகவல்கள் வெளியானது.

இராஜினாமாவுக்கான காரணம் பற்றி கொலின் பவல் எதுவும் தெரிவிக்கவில்லை. " அதிபர் தேர்தல் முடியட்டும் என்று காத்திருந்தேன். இப்போது நேரம் வந்து விட்டது. பதவி விலகி விட்டேன்" என்று மட்டும் அவர் தெரிவித்தார்.

கொலின் பவலுக்கு பதிலாக புதிய வெளியுறவுத்துறை மந்திரியாக கண்டலிசாரைஸ் நியமிக்கப் படுகிறார். கண்டலிசாரைஸ் இது வரை தேசிய பாதுகாப்பு ஆலோசகராக இருந்தவர். இவர் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சராக வரும் முதலாவது கறுப்பு இனத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



ஈராக் மோசுல் நகருக்கண்மையில் எய்த் அல் ஜசீரா எனும் இடத்தில் நேற்று முன்தினம் தீவிரவாத தாக்குதலுக்குட்பட்டு எரிபொருள் களஞ்சியசாலை தீப்பற்றி எரிகிறது.

# ஈராக் பிரதமரின் உறவினர்கள் தீவிரவாதிகளால் கடத்தல்

ஈராக் பிரதமர் அல்லாவியின் உறவினர்களை கொரில்லாக்கள் கடத்திச்சென்றுள்ளனர். பலூஜா நகரில் நடக்கும் தாக்குதலை உடனடியாக நிறுத்தாவிட்டால், இவர்களை கொன்றுவிடப்போவதாக கொரில்லாக்கள் எச்சரித்துள்ளனர்.

ஒருவாரகால சண்டையில் பாதிக்கப்பட்ட பலூஜா நகர மக்களுக்கு இன்னும் நிவாரண உதவிகள் எதுவும் கிடைக்கவில்லை. சண்டையில் காயமடைந்த அப்பாவி மக்களுக்கு சிகிச்சையளிக்கும் பணியில் செம்பிறை சங்கத்தினர் ஈடுபட்டுள்ளனர்.





ஐவரிகோஸ்டில் விரைவில் தேர்தல் ஒன்றின் மூலம் ஆயுத கலாச்சாரம் தடுக்கப்படும் என ஐ.நா.சபை கூறியுள்ள நிலையில் யுத்த டாங்கி ஒன்றின் முன்னால் விளையாடும் சிறுவர்களையும், அங்கு அணிநடையில் ஈடுபட்டுள்ள நடிகர்களையும், பாடகர்களையும் காணலாம்.

# பலூஜாவில் அமெ.படையினரின் மோசமான செயல்குறித்து ஒளிநாடா வெளியானது

(பாக்தாத்)

ஈராக்கின் பலூஜா நகரில் அமெரிக்கப் படைகள் நடத்திய தாக்குதலின்போது அமெரிக்கப் படைகள் மோசமான முறையில் நடந்து கொண்ட வீடியோக் காட்சிகள் வெளியாகியுள்ளன.

இருதரப்பினருக்குமிடையே இடம்பெற்ற மோதலின்போது காயமடைந்து நிராயுதபாணியாக இருந்த ஒருவரை அமெரிக்கப் படையினர் சுட்டுக்கொலை செய்த காட்சியை பி.பி.சி. உலக சேவை ஒலிபரப்பியுள்ளது.

அமெரிக்கப்படையினருடன் சென்ற எம்.பி.பி. தொலைக்காட்சி சேவையைச் சேர்ந்த நிருபர் ஒருவரே இந்தக் காட்சியைப் படமாக்கியுள்ளார்.

தாக்குதலில் காயமடைந்த நிலையில் ஈராக்கிய பள்ளிவாசல் ஒன்றினுள் தஞ்சம் புகுந்திருந்த ஒருவரையே அமெரிக்க கடற் படையினர் சுட்டுக்கொன்றனர்.

அமெரிக்கப் படையினரின் சர்வதேச விதிமுறைக்கு முரணான இச் செயல் ஒரு மிருகத்தனமானது எனக் கண்டனங்கள் எழுந்துள்ளன.

இதேவேளை இந்த சம்பவத்துடன் தொடர்புடைய அமெரிக்கப் படையினர் மீது விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக அமெரிக்க இராணுவப் போச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# சர்வதேச சமூகத்தின் தேவைக்கே ஆப்கானில் பன்நாட்டுப்படைகள் உள்ளன

## -நேட்டோ அமைப்பின் தலைவர்

(லண்டன்)

ஒன்பதாயிரம் பேர் கொண்ட பன்நாட்டுக் கூட்டுப்படையொன்றை நேட்டோ காபூலிலும் ஆப்கானின் தென்பகுதியிலும் நிறுத்தியுள்ளமை சர்வதேச சமூகங்களின் தேவைக்கே என்றும் நேட்டோ அமைப்பின் தலைவர் கூறியுள்ளார்.

மேற்குக் கரை காஸா, ஆப்கான், ஈரான், ஈராக், ஆகிய நாடுகளின் பிரச்சினைகள் குறித்து ஆராய சர்வதேச சமூகம் முறையான நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டுமென்றும் அவர் கூறினார்.

நிறைவேற்று அதிகாரத் தன்மையின் மூலம் இந்தப்பிரச்சினைகளைத் தீர்ப்பது புத்திசாதுரியமற்ற செயலாகும்.

ஆப்கானிஸ்தான் ஈரான் ஆகிய நாடுகளின் அணுவாயுதம் தொடர்பான முறையான அரசியல் கொள்கையொன்று வகுக்கப்பட வேண்டுமென நேட்டோ அமைப்பின் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.



சூடானின் டார்பரில் ஏற்பட்டுள்ள உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியில் கென்யாவில் பேச்சு நடத்த ஐ.நா.தூதுவர் வருகை தருவதையொட்டி பாதுகாப்புக்கடமையில் ஈடுபட்டிருக்கும் இராணுவத்தினர்.

# அரசபடையின் தாக்குதலுக்கு பதிலடிகொடுப்போம் ஐவரிக்கோஸ்ட் தீவிரவாதிகள் அறிவிப்பு

(லண்டன்)

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை ஐவரிக்கோஸ்ட் மீது ஆயுதத் தடைகளை விதித்துள்ள நிலையில் அரச இராணுவம் நடத்திய தாக்குதலுக்குப் பதிலடிகொடுக்கப் போவதாக ஐவரிக்கோஸ்டின் கிளர்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளார்கள்.

சனாதிபதி ''லோறன்பக் போவின்" படைகள் நாட்டின் வட பகுதியிலுள்ள கிளர்ச்சியாளர்களின் நிலைகளைத் தாக்கியிருப்பதால் சமாதான முயற்சிகள் சீர்குலைந்துள்ளது.

கடந்த ஆண்டு கைச்சாத்திடப்பட்ட சமாதான உடன்படிக்கையை அமுல்செய்யுமாறு, கிளர்ச்சியாளர்களையும் அரசாங்கத்தையும் சர்வதேச சமூகம் வற்புறுத்தி வருகின்ற நிலையில் இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

# இங்கிலாந்து மோப்ப நாய்க்கு கொலை அச்சுறுத்தல்

## -சிறைச்சாலை அதிகாரி தெரிவிப்பு

(லண்டன்)

இங்கிலாந்தின் வடபகுதியில் அமைந்துள்ள சிறைச்சாலையில் பணியாற்றும் பிரதான மோப்ப நாய்க்கு கொலை அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

மன்செஸ்ரர் நகர சிறைச்சாலையில் வேலை செய்யும் நான்கு கால் பிராணிக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக சிறைச்சாலையின் பேச்சாளர் "காடியன்" செய்திப்பத்திரிகைக்கு அறிவித்துள்ளார்.

இந்த சிறைச்சாலைக்கு வருவோரை 6 மோப்பநாய்கள் சோதனையிடுவதாகவும், இந்தக் குழுவின் பிரதான மோப்பநாய் சமீபத்தில் வேலையிலிருந்து நீக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பொதுஇடங்களில் புகைக்க பிரித்தானியாவில் தடை

(லண்டன்)

பொது இடங்களில் புகைபிடிப்பதற்கு பிரித்தானியா தடைவிதிக்கவுள்ளது. அந் நாட்டு பாராளுமன்றத்தில் சுகாதாரத்துறை செயலாளர் கொண்டு வந்த பிரேரணையொன்றை ஆராய்ந்தபோதே இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது. பிரித்தானியாவில் பொது இடங்களில் புகைப்பதில் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து புகையிலை மற்றும் மதுபான நிறுவனங்கள் என்பவற்றுடன் இது குறித்து பேச்சு வார்த்தை நடத்தவும் அந் நாட்டு சுகாதார அமைச்சு தீர்மானம் எடுத்துள்ளது.

# பழங்கால போர் விமான கண்காட்சி

அமெரிக்காவின் நிவேடா பகுதியில் உள்ள லாஸ்வேகாஸ் நெல்லிஸ் விமானப்படைத் தளத்தில் போர் விமானங்களின் கண்காட்சி நடைபெற்றது. இதில் நவீன ரக குண்டு வீச்சு விமானங்கள் எதுவும் இடம் பெறவில்லை. பழங்கால போர் விமானங்கள் மட்டுமே இதில் இடம்பெற்றன. இந்தக் கண்காட்சியில் 2ஆம் உலகப் போரில் இடம்பெற்ற பி-25 ரக குண்டு வீச்சு விமானம் பறந்து சென்ற காட்சி இடம்பெற்றது. முதலில் பறக்க மறுத்த இந்த விமானம் மிகுந்த சிரமத்துக்கு இடையே மெதுவாகப் பறக்கத் தொடங்கியது.

## நமீபிய அதிபர்தேர்தல்

நமீபியாவில் நேற்று முன் தினம் அதிபர் தேர்தலில் வாக்குப் பதிவு தொடங்கியது. நேற்று 16 ஆம் திகதி 2-ஆவது நாளாக இந்த வாக்குப்பதிவு நடக்கிறது. இப்போது அதிபராக இருக்கும் நுஜோம் இதில் போட்டியிட வில்லை. தனது ஆதரவாளரான ஹிபிசியையே தேர்தலில் போட்டியிடவைத்துள்ளார்.

# வெள்ள அனர்த்தத்தால் பாதிப்புற்ற குடும்பங்கள் பாடசாலைகளில் தஞ்சம்

## பாதிப்புக்குள்ளாவோர் தொகை அதிகரிக்கும் அபாயம்!

(அலுவலக செய்தியாளர்)

**தொடர் மழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளத்தால் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளன. மேற்கொண்டும் மழை தொடரும் பட்சத்தில் வெள்ளப் பாதிப்புக்குள்ளாவோர் தொகை உயரும் அபாய நிலையும் உருவாகி வருகிறது.**



கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பரந்தன், உமையாள்புரம், குமரபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 129 குடும்பங்கள் அண்மைய தொடர் மழை காரணமாக இடம்பெயர்ந்து பரந்தன் இந்து மகாவித்தியாலயத்தில் தஞ்சம் புகுந்துள்ளன.

அண்மை நாட்களாக வன்னிப் பகுதி எங்கும் பெய்துவரும் மழையால் ஏற்பட்ட வெள்ளத் தாக்கத்தினால் இடம்பெயர்ந்த 128 குடும்பங்ககளைச் சேர்ந்த 400 வரையானவர்கள் இங்கு தஞ்சம் புகுந்துள்ளனர்.

இவ்வாறு இடம்பெயர்ந்து பாடசாலையில் தஞ்சம் புகுந்திருக்கும் மக்களுக்கு கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனமும், கண்டாவளைப் பிரதேச செயலகமும், விடுதலைப் புலிகளின் பரந்தன் பிரதேச அரசியல்துறையினரும் இணைந்து சமைத்த உணவை வழங்கி வருகின்றனர். 50 குடும்பங்களுக்கு பாய் வழங்கப்பட்டிருப்பதாகவும், ஏனைய குடும்பங்களுக்கும் வழங்குவதற்கான ஏற்பாடுகளைத் தாம் மேற்கொண்டுள்ளதாக கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

இதேவேளை, இடம்பெயர்ந்து பாடசாலையில் தங்கியிருக்கும் மக்களுக்கு தொற்று நோய் ஏற்படாத வகையில் கிளி. மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் முகாமில் தங்கியுள்ள மக்கள் தெரிவித்தனர்.

தமது குடியிருப்புப் பகுதிகளில் வெள்ளம் பெருகுவதற்கு இராணுவம் அமைத்த அரணும் எல் ஆர் நாயாறு வாய்க்கால் நீண்ட காலமாக தோண்டப்படாததும் ஒரு காரணம் எனவும் மக்கள் தெரிவித்துள்ளனர். உமையாள்புரம் கிராமத்தைச் சேர்ந்த 93 குடும்பங்களும், குமரபுரத்தைச் சேர்ந்த 33 குடும்பங்களும், பரந்தன் கிராமத்தைச் சேர்ந்த 4 குடும்பங்களும் இவ்வாறு இடம்பெயர்ந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் தொடர்ந்து பெய்து வரும்பருவ மழையால் தேவிபுரம் ஆ பகுதியில் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டு மக்கள் இடம்பெயர்ந்து பாடசாலையில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

பருவ மழையின் காரணமாக மக்கள் வாழ்விடங்களில் வெள்ளம் புகுந்தது. இதனால், தேவிபுரம் ஆ பகுதி மக்கள் தற்காலிகமாக வீடுகளிலிருந்து வெளியேறி தேவிபுரம் பாடசாலையில் தங்கியுள்ளனர். இவர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் உதவிகளை அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் மேற்கொண்டு வருகிறது.

தேவிபுரம் பாடசாலையில் தங்கியுள்ள 110இற்கு மேற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களிற்கான மேலதிக உதவிகள் தொடர்பாக அகதிகள் புனர்வாழ்வுக்கழக சமூக பொருளாதார வளர்ச்சி நிறுவன இணைப்பாளர்கள் சம்பவ இடங்களிற்கு நேரில் சென்று ஆராய்ந்து உதவி நடவடிக்கையில் ஈடுபடுவதாகத் தெரிவித்துள்ளனர்.

மேலும் இப்பகுதியின் நிலைமைகளை நேரில் கண்டறிவதற்காக நேற்று முன்தினம் வன்னி பாராளுமன்ற உறுப்பினரும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலரும், மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளரும் விஜயம் செய்திருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. (லோ, தீ, 19, 08)

## மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

மன்னார் மாவட்ட கடற்புலிகள் அரசியல்துறையினரால் மாவீரர் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வுகள் பின்வரும் நாட்களில் குறிப்பிட்ட இடங்களில் இடம்பெறவுள்ளன. அதனடிப்படையில் 22ஆம் திகதி முழங்காவில் மகாவித்தியாலயத்தில் காலை 11.00 மணிக்கும், 23ஆம் திகதி பூநகரி மகாவித்தியாலயத்தில் காலை 11.00 மணிக்கும், 24ஆம் திகதி இலுப்பைக்கடவை மகாவித்தியாலயத்தில் காலை 11.00 மணிக்கும் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மன்னாரில் பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கின

மன்னாரில் தொடர்ச்சியான மழையினால் பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

மேற்படி நீரில் மூழ்கிய கிராமங்களில் சௌத்பார், சாந்திபுரம், எமில்நகர், பள்ளிமுனை, சாவற்கட்டு, வங்காலை, வட்டக்கண்டல் ஆகிய கிராமங்களே பெரியளவில் பாதிக்கப்பட்டுள்ளன. இதேவேளை மன்னார் அரசாங்க அதிபர் வி.விசுவலிங்கம், மன்னார் நகர பிரதேச செயலாளர் ஆகியோரின் வேண்டுகோளிற்கிணங்க சற்.ஓ.எ. நிறுவனம் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்குத் தற்காலிக கூரை விரிப்புக்களை வழங்கியுள்ளது. பாதிப்புற்ற கிராம மக்களுக்கான உடனடி உலர்உணவு விநியோகத்தையும் அரச அதிபர் மேற்கொண்டுள்ளார். (மி)



பரந்தன் சந்தியில் அமைந்துள்ள பிரதான பேருந்து தரிப்பு நிலையம் குன்றும் குழியுமாக மழை நீர் தேங்கி காணப்படுகின்றது. இதனால் பேருந்து கள் மக்களை ஏற்ற முற்படும் வேளை குழிகளில் உள்ள நீர் தரிப்பிடத்தில் நிற்கும் மக்களை நனைக்கின்றது. மழை காலத்தில் பெரும் சிரமத்தை எதிர்கொண்டு வரும் பேருந்து தரிப்பு நிலையத்தைப் படத்தில் காணலாம்.

(படம்-வரன்)

### நியாப் திட்டம் II தொடர்பான

## வவுனியா மாவட்ட விசேட விவசாயக் குழுக்கூட்டம்

(வவுனியா செய்தியாளர்)

நியாப் திட்டம் II தொடர்பான வவுனியா மாவட்ட விசேட விவசாயக் குழுக்கூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

வவுனியா அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை 11.00 மணிக்கு அரச அதிபர் க.கணேஷ் தலைமையில் நடைபெறும் இவ்விசேட கூட்டத்தில் நியாப் திட்டம் II குறித்து அங்கத்தவர்களுக்கு அறிமுகப்படுத்தலும், பிரதேச செயலர்களால் பெறப்பட்ட மையக் கிராமத் தெரிவிற்கான விண்ணப்பங்களை பட்டியலில் இடுவதும் இடம் பெற உள்ளது.

அத்துடன் மையக் கிராமங்களின் தெரிவிற்கான மாவட்டக்குழு அமைத்தல், தெரிவுக்குழு அங்கத்தவர்களுக்கான அறிவுறுத்தல் வழங்கலும் இக்கூட்டத்தில் இடம் பெறவுள்ளது. (10)

## குப்பைகள் அகற்றல்

(மன்னார்)

மன்னார் லயன்ஸ் கழகத்தினரால் மன்னார் நகர்ப்பகுதியில் உள்ள குப்பை கூழங்கள் அகற்றப்பட்டு நகரம் சுத்தம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 13ஆம் திகதி மன்னார் லயன்ஸ் கழகத்தால் உழவு இயந்திரம் மூலம் நகரின்குப்பை கூழங்கள் அகற்றப்பட்டன. மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் உதவியுடனேயே லயன்ஸ் கழகம் இந்தப்பணியைச்செய்துள்ளது.(மி)

## பாராட்டு விழாவில் கௌரவிப்பு

(புதுக்குடியிருப்பு)

முல்லை கல்விவலயத்தில் உதவிக்கல்விப்பணிப்பாளராக இருந்து ஓய்வுப்பெற்றுச் சென்றுள்ள புது/ம.வி.பழைய மாணவரும், பாடசாலையின் நீண்டகால ஆசிரியரும், உப அதிபருமாகிய க.திருச்செல்வராசாவிற்கான பாராட்டுவிழா கடந்த 13ஆம் திகதி பிற்பகல் 4.00மணிக்கு பு.ம.வி பழையமாணவர் சங்கத்தால் நடாத்தப்பட்டது. சிறந்த சேவையாளரைப் பாராட்டும் முகமாக இடம் பெற்ற நிகழ்வு புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய அதிபர் தலைமையில் இடம் பெற்றது.

மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான நிகழ்வில் வரவேற்புரையை பு/மகா.வி. பழைய மாணவர் சங்கச்செயலாளர் பார்த்தீபன் நிகழ்த்தினார். தொடர்ந்து விழா நாயகன் க.திருச்செல்வராசா அவர்கட்கு முல்லை. மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் அறிவன்பன் மாஸ்ரர் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். தொடர்ந்து அம்பலவன் பொக்கணை பாடசாலை அதிபர் சோ.இராசரத்தினம் நினைவுக்கேடயம் வழங்கிக் கௌரவித்தார். இதனையடுத்து சிறப்புரையை உதவிக்கல்விப் பணிப்பாளர், பொ.பேரின்பநாயகம் மற்றும் மைக்கல் திலகராசா, கிராம சேவையாளர் கனகசுந்திர சுவாமி ஆகியோர் ஆற்றினர். (08)

## வடமராட்சி கிழக்கில் வெள்ளத்தால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பாதிப்பு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் ஒரு வார காலமாக பெய்து வரும் தொடர்மழை காரணமாக மீள் குடியமர்ந்துள்ள 10 கிராம அலுவலக பிரிவில் உள்ள 4500இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வெள்ளத்தினாலும் வீடுகள் ஊறியுள்ள நிலையில் பாதிக்கப்பட்டுள்ளன.

இடம்பெயர்ந்து இருக்கக்கூடிய வகையில் இடங்கள் இல்லை. பாடசாலைகள், கோயில்கள், தேவாலயங்கள் பொதுக்கட்டடங்கள் எல்லாவற்றிலும் வெள்ளம். கடல் போல் நிற்கின்றது. கரையோர வீதி முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

செம்பியன் பற்று, மாமுனை, தாளையடி மருதங்கேணி, வத்தி ராயன்வேம்படி, உடுத்துறை கொடுக்குளாய், ஆழிய வளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கேவில் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களே பெருந்துன்பப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வெள்ளம் காரணமாக வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா மகாவித்தியாலயம், கட்டைக்காடு றோமன கத்தோலிக்க பாடசாலை, கேவில்அ.த.க.பாடசாலை ஆகியன மூன்றும் மூடப்பட்டுள்ள நிலையில் உள்ளன. வெற்றிலைக்கேணிச் சந்தியிலிருந்து கட்டைக்காடு வரையான 3 கிலோமீற்றர் தூரம் வெள்ளம் வீதியில் நிற்கிறது. இதனால் முகமாலை-புளியங்குளத்தில் இருந்து வரும் பஸ்சேவை ஆழியவளையில் நிறுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (11)

## கல்வி மேம்பாட்டு நிலைய அனுசரணையில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி

(உடையார்கட்டு)

முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய அனுசரணையுடன் S.E.F நிறுவன உதவியுடன் சமூக பொருளாதார வளர்ச்சி நிறுவனத்தால் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பதினாறு நாள் பயிற்சி வகுப்பு ஆரம்ப நிகழ்வு விசுவமடுப் பிரதேச முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத் தலைவர் தலைமையில் கடந்த சனிக்கிழமை ஆரம்பமானது.

நிகழ்விற்கான தமிழீழ தேசியக் கொடியை மட்டு-அம்பாறை மாவீரர் மண்டபப் பொறுப்பாளர் ராஜூ ஏற்றினார். இந்நிகழ்விற்கான கருத்துரைகளை செடோ இணைப்பாளர் யூட், விவசாய போதனாசிரியர் கமலதீபன், தமிழர் புனர்வாழ்வுக்கழக ஆரம்பப் பிள்ளை அபிவிருத்திப் பணிப்பாளர் பாண்டியன் ஆகியோர் வழங்கினர்.

முன்பள்ளி ஆசிரியர்களின் பதினாறு நாள் பயிற்சி வகுப்பின் முதல் கட்ட நான்கு நாள் வகுப்பு உடையார்கட்டு இருட்டுமடு மகேஸ்வரன் முன்பள்ளியில் ஆரம்பிக்கப் பட்டது. (15)

## சிறுவர், முதியோர் தின நிகழ்வு

சர்வேதச சிறுவர்,முதியோர் தினத்தையொட்டி கரைச்சிப் பிரதேச செயலகத்தினரால் சிறுவர்,முதியோர் தின விழா கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் கொண்டாடப் பெற்றது.கரைச்சிப் பிரதேச செயலர் க.சுலோஜினி தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில், மங்கல விளக்கினை கிளி. வலய கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் ஏற்றிவைத்தார்.வரவேற்புரையினை கரைச்சிப் பிரதேச சபை விசேட ஆணையாளர் பொன் நித்தியானந்தன் நிகழ்த்தினார். தலைமையுரையினையடுத்து சிறப்புரையினை கிளி.வலய கல்விப் பணிப்பாளர், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகஸ்தர் செல்வி.க.சத்தியவதனி, கிராமசேவை அலுவலர் வைரவநாதன், கிளி. வர்த்தக சங்கச்செயலர்ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து முதியோர்கள் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப் பெற்றனர். அதனைத் தொடர்ந்து சிறுவர், முதியோர் தினத்தையொட்டி நடாத்தப் பெற்ற கவிதை, கட்டுரைப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்கள் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.. (சோ)

# மாவீரர் நாளை உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்க
# யாழ்.மாவட்ட தே.எ.பேரவை விசேட ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

**தாயக மண்மீட்புப் போரில் தமது இன்னுயிரை அர்ப்பணித்து எம் நெஞ்சில் நிறைந்துள்ள புனிதர்களை நினைவு கூரும் மாவீரர் நாளை உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்க யாழ்ப்பாண மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை அறைகூவல் விடுத்துள்ளது.**

மாவீரர் நாள் வேலைத் திட்டங்களை பொது அமைப்புக்களுடன் இணைந்து தேசிய எழுச்சிப் பேரவையினர் முன்னெடுத்து வருகின்றனர்.

யாழ்.மாவட்ட பிரதேசங்களில் வீதிகளை சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கவும், முக்கிய இடங்களில் வளைவுகள் கட்டியும் நினைவுப் பந்தல்கள் அமைத்தும் மாவீரர் திருவுருவப்படங்களை வைத்து மலர் வணக்கம் செலுத்தவும் தேசிய எழுச்சிப் பேரவையினர் ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். அதேவேளை மாவீரர் பெற்றோரை சிறந்த முறையில் கௌரவிக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென்பதோடு ஒவ்வொரு மாவீரர் துயிலும் இல்லம் செல்வதற்கும் தேசிய எழுச்சிப் பேரவையினர் விரிவான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற தேசிய எழுச்சிப் பேரவையின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அதேவேளை மாவீரர் நாளன்று முதல் மாவீரன் சங்கர் வீரச்சாவடைந்த நேரமான மாலை 6.05 மணிக்கு ஆலயங்களில், தேவாலயங்களில், பள்ளிவாசல்களில் மணி ஒலி எழுப்பி சுடரேற்றவும், அனைத்து வீடுகளில், அலுவலகங்களில் சுடரேற்றவும் தேசிய எழுச்சிப் பேரவையினர் ஒழுங்குகளைச் செய்ய வேண்டுமெனவும் இதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கி விடுதலை ஒளி பிரகாசிக்கச் செய்ய அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடகப் பேச்சாளர் ப.கனகலிங்கம் தெரிவித்துள்ளார்.

# யாழ்.இற்கு 30 பேருந்துகளை எடுத்துவர நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் பேருந்துப் போக்குவரத்து சேவைகளில் நிலவிவரும் நெருக்கடிகளைத் தீர்த்து வைக்கும் முகமாக வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் சேவைகளை விஸ்தரிப்பதற்கான உடனடி நடவடிக்கைகளை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எடுத்துள்ளது.

யாழ்.குடாநாட்டில் உள்ள பல்வேறு பகுதிகளுக்கும் இடம் பெற்றுவரும் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பேருந்து சேவையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையால் வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய பகுதி மக்கள் பெரும் இடர்களை அனுபவித்து வருகின்றனர்.

இது குறித்து அப்பகுதி மக்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களிடம் செய்த முறைப்பாடுகளையடுத்தே கூட்டமைப்பினர் இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

அந்த அடிப்படையில் இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையில் இருந்து உடனடியாக 30 பேருந்துகள் யாழ்.குடாநாட்டிற்கு எடுத்து வரப்படவுள்ளன. (33)

## புனரமைக்க கோரிக்கை

(தென்மராட்சி)

தென்மராட்சியில் கடந்தகால போர் நடவடிக்கையால் சிறிலங்காப்படைகளின் விமானக் குண்டு வீச்சினால் சிதைவுண்டு கிடக்கும் சாவகச்சேரி நீதிமன்றக் கட்டடத்தைப் புனரமைக்க வேண்டுமென இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். நகரத்தின் மையத்தில் அமைந்துள்ள இந்த நீதிமன்றம் சிதைவுண்டு காட்சியளிப்பது நகரத்தின் அழகை கெடுப்பதாகவும், உடனடியாக இந்த நீதிமன்றத்தைப் புனரமைக்க வேண்டும் எனவும் மக்கள் கோரியுள்ளனர். இந்த நீதிமன்றத்தைப் புனரமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. (28)

# வீதிதிருத்தம் குறித்து அரசஅதிபருக்குக் கோரிக்கை

(தென்மராட்சி)

கண்டிவீதியையும்-புத்தூர் சுன்னாகம் வீதியையும் இணைக்கும் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயிலின் ஐந்து கிலோமீற்றர் நீளமான வீதியைத் திருத்தித்தருமாறு மட்டுவில் வடக்கு, மட்டுவில் மத்தி, சாந்திபுரம், கைதடி, நுணாவில் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளனர். கடந்த கால சிறிலங்கா விமானப்படைகளின் குண்டுவீச்சினால் இவ் வீதி குன்றும், குழியுமாய் இன்று காட்சி அளிக்கிறது. இப்பாதையூடாகப் பயணிக்கும் மக்கள் பெரும் சிரமப்படுவதாகவும் விவசாய உள்ளீட்டுப் பொருட்களை இப்பாதையூடாக எடுத்துச் செல்வதில் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர். மேலும் இவ் வீதியானது வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் பராமரிப்பில் இருந்து வருகின்றது. பலமுறை அபிவிருத்தித் திணைக்களத்தின் பார்வைக்கு இப்பிரதேச மக்களால் இவ்வீதி குறித்து முறையிட்டும் பலன் கிடைக்கவில்லை என்றும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (28)

# இராணுவ புலனாய்வுத் துறையினரின் கெடுபிடி தென்மராட்சிப் பகுதியில் மீண்டும் அதிகரிப்பு

(தென்மராட்சி)

கொடிகாமத்தில் சிறிலங்காப் படைகளால் நீதி கேட்டுப் போராடிய மக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதற்குப் பின்னால் சிறிலங்காப்படைகளின் செயற்பாடுகளில் பாரிய மாறுதல்கள் ஏற்பட்டு இருப்பதாகக் கூறப்படுகின்றது.

படைமுகாம்களின் முன்னணிக் காவல் அரண்கள் அனைத்திலும் அளவுக்கதிகமான படைகள் குவிக்கப்பட்டு இருப்பதுடன்- வீதி ரோந்து நடவடிக்கைகளும், கனரக வாகன ஓட்டங்களும், பீல்ட்பைக் படையணிகளின் நடவடிக்கைகளும் வீதிகளில் அதிகரித்து இருப்பதாக தென்மராட்சி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் சிறிலங்கா புலனாய்வுத்துறையினரின் அச்சுறுத்தல் நடவடிக்கைகள் அதிகரித்து இருப்பதாகவும் தற்பொழுது நடந்து முடிந்த மக்கள் போராட்டம் குறித்தும் மக்களால் தீயிடப்பட்டட உந்துருளி குறித்தும் போராட்டத்தை முன்னின்று செய்த பொதுமக்கள் குறித்தும் இப்பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளில் சிறிலங்காப் புலனாய்வுத் துறையினர் தகவல்கள் சேகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். புலனாய்வுத்துறை மற்றும் படைத்துறையின் இத்தகைய அச்சுறுத்தும் நடவடிக்கைகளுக்கு மக்கள் பெரும் எதிர்ப்பும், எச்சரிக்கையும், தெரிவித்து வருகின்றனர். (28)

# தேசியத்தலைவரின் பிறந்த நாளை முன்னிட்டு யாழ்.இல் சமூகநலன் சார் வேலைத்திட்டங்கள்

## தேசிய எழுச்சிப் பேரவை ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தமிழீழத் தேசிய தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் ஐம்பதாவது பிறந்த நாளை முன்னிட்டு 300 பேர் இரத்ததானம் செய்யும் ஒழுங்கை யாழ்ப்பாண மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை மேற்கொண்டுள்ளது. எமது தேசியத் தலைவரின் பிறந்த நாளான எதிர்வரும் இருபத்தாறாம் திகதி தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்ட செயலகத்தில் இரத்ததான நிகழ்வு நடைபெறவுள்ளது.

அதேவேளை தேசியத்தலைவரை வாழ்த்தி "கேடயம்" ஒன்றை தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களுக்கு அனுப்பி வைக்க யாழ்ப்பாண மாவட்ட தேசிய எழுச்சி பேரவை நடவடிக்கை எடுத்து வருகிறது.

அத்துடன் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 10 குடும்பங்களுக்கு சமூக நலத்திட்டத்தின் கீழ் உதவி வழங்கப்படுகிறது. இதேபோன்று பல்வேறு சமூக நலன் சார் திட்டங்களை நடைமுறைப்படுத்த தேசிய எழுச்சிப் பேரவையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

தேசியத் தலைவரின் ஐம்பதாவது பிறந்த நாளன்று ஒவ்வொரு பிரதேசங்களிலும் பொங்கல் பொங்கியும்,. இனிப்புப் பண்டங்கள் வழங்கியும் மகிழ்ச்சியுடன் முன்னெடுக்கவும் ஒவ்வொரு ஆலயங்களிலும் தலைவர் நீடூழி வாழ பிரார்த்தனை செய்தும், பூசை வழிபாடுகளை நடாத்த ஆலய பரிபாலன சபையினர் தேசிய எழுச்சிப் பேரவையின் உதவியுடன் ஏற்பாடு செய்துள்ளனர் என தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடகப் பேச்சாளர் ப.கனகலிங்கம் தெரிவித்தார்.

# சுவிஸ் அபிவிருத்தி நிலைய பிரதிநிதி யாழ்.சென்று கட்டுமான பணிகளைப் பார்த்தார்

சுவிஸ் அரசின் சர்வதேச தொண்டரமைப்பான சுவிஸ் அபிவிருத்தி நிலையத்தின் தலைமையக அதிகாரி இவான்கயூரி கைதடி நவீல்ட் வலுப்புலன் இழந்தோர் பாடசாலைக்கு விஜயம் செய்துள்ளார்.

யாழ். குடாநாட்டிற்கான விஜயமொன்றை மேற்கொண்டு கடந்த 3ஆம் திகதி வருகை தந்திருந்த அவர் 15ஆம் திகதிவரை தங்கியிருந்து சுவிஸ் அபிவிருத்தி நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நிர்மானப்பணிகளை பார்வையிட்டிருந்தார்.

இந்நிலையில் கடந்த 9ஆம் திகதி கைதடி நவீல்ட் வலுப்புலன் இழந்தோர் பாடசாலைக்கு விஜயம் செய்த அவர் அங்கு முன்னெடுக்கப்படும் நிர்மாணப்பணிகளையும் பார்வையிட்டார். (27)

# உறுப்பினருக்கு மனித உரிமை குறித்துகருத்தரங்கு நடத்த ஈ.பி.டி.பி. தலைமை அனுமதி மறுப்பு

(யாழ்ப்பாணம்)

ஈ.பி.டி.பி. உறுப்பினர்களிடையே மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்டு வரும் தொடர் கருத்தரங்குகளுக்கு பாதுகாப்புக் காரணங்களினால் அனுமதி வழங்க முடியாதென ஈ.பி.டி.பி. அமைப்பு அறிவித்துள்ளது.

மனித உரிமைகள் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகம் தொடர் கருத்தரங்குகளை நடாத்தி வருகின்றது. இதனோர் பகுதியாக ஈ.பி.டி.பி உறுப்பினர்களுக்கு இக்கருத்தரங்குகள் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்டு வருகின்றது.

முன்னதாக ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் அணி மற்றும் ரெலோ ஆகிய கட்சிகளினது உறுப்பினர்களிற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரிகளால் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டிருந்தது. இதன் தொடர்ச்சியாக ஈ.பி.டி.பி. அமைப்பின் உறுப்பினர்களுக்கான கருத்தரங்கொன்றினை அதன் யாழ் மாவட்ட தலைமைப் பணிமனை அமைந்துள்ள ஸ்ரீதர் திரையரங்கினில் நடாத்த ஆணைக்குழு அதிகாரிகளால் அனுமதி கோரப்பட்டிருந்தது.

எனினும் இதனை நிராகரித்துள்ள ஈ.பி.டி.பி.அமைப்பின் தலைமை, உரிய பாதுகாப்பின்மையினைக் காரணங்காட்டி குறித்த கருத்தரங்கை நடாத்த அனுமதி மறுத்துள்ளது.

இதனிடையே யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் படை அதிகாரிகள் மற்றும் பொலிசாருக்கு உயர் பாதுகாப்பு வலயத்தினில் வைத்து மனித உரிமைகள் தொடர்பான கருத்தரங்குகள் நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (27)

# எப்போது சனாதிபதித் தேர்தல் நடந்தாலும் ரணிலை சனாதிபதியாக விடமாட்டோம்

(கொழும்பு)

2005,2006 அல்லது 2007ஆம் ஆண்டிலேயே சனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டாலும் உரிய நேரத்தில் உரிய நடவடிக்கைகளை எடுத்து ரணில் விக்கிரமசிங்க இந்நாட்டில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியாக வருவதை தடுப்போம் என ஜே.வி.பி.யின் பிரதம செயலர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கடந்த 13ஆம் திகதி சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அவர் உரையாற்றும்போது மேலும் கூறியதாவது,

தமது கட்சி எதிர்க்கட்சியினர் கூறுவது போன்று அதிகாரத்துக்கு வருவதற்கு அவசரப்படவில்லை. நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே நோக்கம். அதற்காகவே உரிய நேரத்தில் சந்திரிகாவுடன் கூட்டணி சேர்ந்தோம் என்றும் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி.யும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் நிறைவேற்றதிகார சனாதிபதி முறையை விரும்பவில்லை என்று கூறிய அவர் அரசியலமைப்பை மாற்றவோ அல்லது அதனை நீக்கவோ முடியாதுவிட்டாலும் ரணில் விக்கிரமசிங்க சனாதிபதியாவதைத் தடுப்போம் என்றார்.

வேறு எந்த ஒரு கட்சியும் செய்யாத ஒன்றை ஜே.வி.பி. செய்துள்ளதுடன் மக்களின் தீர்மானப்படி நாட்டை வெற்றிப் பாதை நோக்கி இட்டுச் செல்வதாகவும் தெரிவித்த அவர், 1989ஆம் ஆண்டு ஜே.வி.பி. ஒழிந்துவிட்டதாக ஐ.தே.கட்சி நினைத்திருப்பினும் நாம் 1994ஆம் ஆண்டு மீண்டும் தலை நிமிர்ந்துவிட்டோம் என்று கூறியுள்ளார்.

# 20-27ஆம் திகதி வரை கள்ளுக்கடைகள் பூட்டு

மாவீரர் தினத்தை முன்னிட்டு தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள கள்ளுக்கடைகள் அனைத்தும் வரும் 20 திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை பூட்ட முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. இதறகான அறிவித்தல்கள் முறைப்படி செய்திருப்பதாக சாவகச்சேரி வர்த்தக சங்கத் தலைவர் மருத்துவர் அருளானந்தம் தெரிவிக்கின்றார். (28)

# தமிழீழத்தில் நீர்மின் உற்பத்தித் திட்டம் பரீட்சார்த்த முயற்சி வெற்றியளிப்பு

எரிபொருள் இல்லாமல் மின்சாரம் உற்பத்தி செய்யும் நடவடிக்கையின் பரீட்சார்த்த செய்முறை ஒன்று கிளிநொச்சியில் மேற்கொள்ளப்பட்டு வெற்றிகரமான முறையில் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. இந்த மின்உற்பத்தி செயன்முறை கடந்த 10 ஆம் திகதி அனைவரது பார்


தொழில் நுட்ப வல்லுனர்

வைக்கும் விடப்பட்டது.


இதனை நிர்வகித்து அதன் மூலம் பூரண பலனையும் எதிர் காலத்தில் பாரியளவிலான மின்சாரத்தை எரிபொருள் இல்லாமல் உற்பத்தி செய்வேன் என்ற அசையாத உறுதியோடு இந்த மின் உற்பத்தி செயன் முறையை தனது எண்ணக்கருவில் உருவாக்கிய அந்த தொழில்நுட்ப வல்லுனரை சந்தித்து அவருடைய இந்த உற்பத்தியும் அதனுடைய பெறுபேறும் அதனைச் செய்வதற்கு உங்களை தூண்டிய காரணி மற்றும் எதிர்காலத்திட்டம் என்ன எனக் கேட்டோம்.

யாழ்ப்பாணத்தைச் சொந்த இடமாகக் கொண்ட கந்தையா கனகலிங்கம்(வயது63) என்பவரே இந்த மின்சார உற்பத்திச் செயன் முறைக்கு காரணகர்த்தாவாக விளங்குகின்றார்.

இவர் கடந்த 1974 ஆம் ஆண்டிலே எமது மண்ணில் கிடைக்கும் வளத்தினைக் கொண்டு எமது மக்களுக்குத் தேவையான உற்பத்திப்பொருட்களை உற்பத்தி செய்ய ஆரம்பித்துவிட்டார்.

அந்த வகையில் சிங்கம்ஸ் பவுடர், கங்காப்பவுடர் போன்ற முகப்பவுடர்களையும் சன்வையிட் சவர்க்காரம் என்பவற்றையும் 1974 தொடக்கம் 1977 ஆம் ஆண்டு வரை உற்பத்தி செய்து யாழ்.குடாநாட்டில் பாரிய வெற்றியைத் தமதாக்கிக்கொண்ட கனகலிங்கம் தற்பொழுது பிரான்சில் வசித்து வருகிறார்.

இவர் பிரான்சில் வசிக்கும் போது அங்கு மாடியில் நீரினை இரண்டு கைகளிலும் கொண்டு செல்லும் போது தனக்கு ஒரு எண்ணம் தோன்றியதாம். இந்த நீர் வலுவைக்கொண்டு ஒரு சுழற்சியினை மேற்கொள்ள முடியாதா என்று அதன் பிரகாரம் பரீட்சார்த்த முறைகள் பலவற்றை அந்



நாட்டிலேயே செய்து அதனை எமது மண்ணில் நிறைவேற்றி எமது பகுதிகளுக்குத் தேவையான மின்சாரத்தை எரிபொருட்கள் இல்லாமலேயே பெற்றுக்கொள்ளலாம் என்ற பெரும் எதிர்பார்ப்புடன் இதனை உற்பத்தி செய்து இன்று வெற்றி கண்ட நிலையில் மீண்டும் வெளிநாடு செல்லும் கனகலிங்கம் அவர்களையும் அவரது மின்உற்பத்தி செயன் முறையையும் சென்று பார்வையிட்டோம்.

***உங்களுக்கு எப்படி இந்த மின் உற்பத்தி பொறிமுறை செய்யும் எண்ணம் ஏற்பட்டது?**

இந்த எண்ணம் எனக்கு எப்படி வந்தது எனில் என்னுடைய தேவை அல்லது எனது சமூகம் சார்ந்த தேவை எது என்று எண்ணுகின்றேனோ அதை நிறைவேற்ற நான் முயல்கின்றேன். அது செயல் வடிவில் காட்சி அளிக்கின்றது. அதுதான் எனது அறிவு என்று கூறுவேன்.

***கிளிநொச்சியில் இந்த மின்சார உற்பத்தியை மேற்கொள்ள நீங்கள் முன்வந்த காரணம் என்ன?**

எமது தாயகப்பகுதியில் எமக்குக் கிடைக்கின்ற வளங்களைக் கொண்டு எமக்குத் தேவையானவற்றை நாமே உற்பத்தி செய்தோம் என்றால் அந்நியரிடம் கையேந்தி நிற்கும் நிலைக்கு நாம் செல்ல வேண்டிய நிலை ஏற்படாது. அதனால் எமது பகுதிக்கு நிரந்தரமான தொடர்ச்சியான மின்உற்பத்தியோ அல்லது மின்சார விநியோகமோ இன்று வரை பூர்த்தியாக்கப்படவில்லை.

இதனால் கிளிநொச்சியைப் பொறுத்த மட்டில் இரணைமடுக்குளத்தில் இருந்து வரும் நீரினை மையமாகக் கொண்டு இந்த மின்உற்பத்திச் செயன்முறையை மேற்கொள்வது பொருத்தமாக இருக்கும் என்ற காரணத்தினால் இந்தப் பகுதியில் முதன் முறையாக இந்த உற்பத்தி நடவடிக்கையை மேற்கொள்ள முன்வந்துள்ளேன் என்றார்.

***இந்த மின்உற்பத்தி செயன்முறையைச் செய்து எல்லோருக்கும் காட்டி இருக்கின்றீர்கள். இதனுடைய பொறிமுறை தொடர்பான விளக்கத்தைக் கூறமுடியுமா?**

முதலாவதாக இந்த மின் பிறப்பாக்கியின் ஆரம்பஇடம் உங்களுக்குத் தெரிகின்றது. இது 84 அங்குல வட்டத்தில் காணப்படுகிறது. இதைச் சுற்றிவர 44 பட்டைகள் இருக்கின்றன. அந்த 44 பட்டைகளும் சுழற்சி கொடுக்கும் போது அந்தப் பட்டைகளில் இருந்து சுமார் 13 அடி கீழாக வட்டமான ஒரு சில்லு போகின்றது. அந்த வட்டச் சில்லை இந்தப் பட்டைகள் சுழலவைக்கின்றன.

இவ்வாறு சுழலவைப்பதால் அதற்குக் கீழ் உள்ள சிறிய சில்லுக்குப் பத்துச்சுற்றுக் கிடைக்கின்றது. அதன் தொடர்ச்சியாக இருக்கும் அடுத்த வட்டப்புள்ளி சுமார் 400 இற்கு மேற்பட்ட தடவை சுற்றுகின்றது. இது 400 தடவை சுற்றும் போது அடுத்ததாக இருக்கும் மின்பிறப்பாக்கி சுமார் 2 ஆயிரம் தடவைக்கு மேல் சுற்றுகின்றது.

இது இவ்வாறு சுற்றும் போது எங்களுக்கு 1 கிலோ வாற் மின்பிறப்பாக்கியில் உள்ள வோல்ட் மானியின் அளவு முந்நூறு வோல்ட்டைக் காட்டுகின்றது. இதற்குச் சரியான அளவு நீரினை நாங்கள் தொடர்ந்து செலுத்துவதன் ஊடாகத் தான் எதிர்கால பாரிய திட்டத்தில் குளங்களில் இருந்து வரும் நீரைப்பாவிக்கப்போகின்றோம்.

அதன் முதற்கட்டமாக இந்த இடத்தில் இதை நாங்கள் ஒரு பரீட்சார்த்தமாக உங்களுக்குச் செய்து காட்டி அந்த 35 அடி உயரத்திற்கு மேல் சுமார் 1000 லீற்றர் நீர் கொள்ளக்கூடிய அந்த நீர்த்தாங்கியில் இருந்து நீர்வெளியேறி 44 பட்டைகளையும் சுற்றும் போது அடுத்தது 10 தடவை சுற்றும். அடுத்தது 400 தடவை சுற்றும் இறுதியாக மின் பிறப்பாக்கி 2000 தடவை சுற்றும். அநேகமாக 2000 தடவை சுற்றும் போது எந்த மின்பிறப்பாக்கியும் மின்சாரத்தை வழங்கத் தொடங்கும் என்பதில் ஐயமில்லை. அவ்வாறே எங்களுக்கும் மின்சாரம் கிடைக்கின்றது.

***இந்த ஆரம்ப முயற்சியின் பயனாக உங்களுக்குக் கிடைத்திருக்கும் பெறுபேறுகள் பற்றிக் கூறமுடியுமா?**

அதாவது இதை துணிந்து செய்தது என்னுடைய ஒரு கெட்டித்தனம் என்றே சொல்லுவேன். ஏனெனில் நான் ஒரு நல்ல காரியத்தை எமது தேசத்தில் எமது மக்களுக்காக செய்யப் போகிறேன் என்ற துணிவு இருக்கின்றது. அதனடிப்படையில் எவ்வளவு தோல்வி வந்தாலும் அதை நான் செய்து முடிப்பேன் என்ற உறுதி இருந்தது.

இதனை உற்பத்தி செய்ய நான் கிளிநொச்சி வந்து ஆறு மாதம் ஆகின்றது.



இதில் 5 மாதம் மிகவும் கஷ்ரப்பட்டு விட்டேன். இருந்தும் நான் விடவில்லை. இந்த 44 பட்டைகளையும் பூட்டி அவற்றின் சமநிலையையும் கண்டுபிடித்து நிவர்த்தி செய்து விட்டேன். இதனை எப்படி சமநிலையில் சுற்றவைத்தேன் என்பது எனக்கு அபூர்வமாகத் தான் உள்ளது. இது தான் எனக்குக் கிடைத்த முதலாவது வெற்றியும் பெறுபேறுமாக நான் நினைக்கிறேன்.

***இதன் அடிப்படையில் இருந்து உங்களின் எதிர்காலத் திட்டம் என்னவாக இருக்கும்?**

இதில் கிடைத்த ஆரம்ப அறிவைக் கொண்டு நாங்கள் கூடியளவு மின்சாரத்தை எவ்வாறு உற்பத்தி செய்யலாம் என்பதையும் அதற்குரிய இடத்தையும் நான் தெரிவு செய்து அதற்கு வேண்டிய கருவிகளை எவ்வாறு உற்பத்தி செய்யலாம் என்பதையும் சிந்தித்து அதன் மூலம் அவற்றை உற்பத்திப் பொருளாக்கி அதன் மூலம் பாரிய பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கை உண்டு.

அதன் அடிப்படையில் அடுத்த கட்டம் இரணைமடுக்குளத்தில் இருந்து நீர் வரும் வாய்க்காலில் கிட்டத்தட்ட ஒரு 10 அடி உயரத்திற்கு ஒரு கட்டு கட்டி அந்தப் பத்து அடி உயரத்திற்கு மேலாக நீர்பாயும்போது அதனை இந்த பட்டைகள் ஏந்தும். அங்கு நாங்கள் செய்து பூட்டப்போகும் பட்டையின் நீர் கொள்ளும் அளவு சுமார் 1000 லீற்றர் ஆகும். இந்த ஆயிரம் லீற்றர் தண்ணி சடக் சடக் என்று நிமிடத்திற்கு ஒரு தடவை சுற்றுவதற்கிடையில் எமக்கு எவ்வளவு மின் கிடைக்கும் என்பதனை கற்பனை செய்து பார்த்தால் தெரியும்.

அத்தோடு, இதற்கு நான் ஒரு பெயரையும் வைத்தேன். எனது மகன் மாவீரர், அவன் பெயர் மாதவன். அதனால், மாதவன் நீர் மின

நேர்காணல் குகன்

உற்பத்தித் திட்டம் என்ற பெயரை வைத்துள்ளேன்.

***நீங்கள் தற்பொழுது புலம்பெயர்ந்த நாட்டில் வாழ்ந்தாலும் எமது தேசத்தில் இதைச் செய்ய வேண்டும் என்ற மனப் பாங்கு எப்படி வந்தது?**

நான் 1985ஆம் ஆண்டிலிருந்தே எமது விடுதலைப் போராட்டத்திற்கு ஏதோ ஒரு வகையில் பங்களிப்பு செய்து கொண்டுவருகின்றேன். அந்த வகையில் நான் இப்படி ஒரு திட்டத்தை எமது பகுதி மக்கள் மின்சாரம் இல்லாமல் பெரும் அல்லற்படும் வேளையில் அவர்களுக்கு அதனை வழங்க வேண்டும் என்று கூடிய அக்கறை கொண்டிருந்தேன். அதன் பிரகாரம் 2000ஆம் ஆண்டிலே அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களை தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொண்டு கேட்டிருந்தேன். அவர் பூரண ஆதரவு அளித்திருந்தார். ஆனால், அந்தக் கட்டத்தில் இதை நான் மேற்கொள்ள முடியவில்லை.

பின்னர் 2002ஆம் ஆண்டு அரசியல் துறைப் பொறுப்பாளர் சுவிசிற்கு வருகை தந்தபோது நான் நேரடியாக சென்று கேட்ட போது அவர் என்னை மிகவும் பாராட்டி நீங்கள் எங்கள் மண்ணிற்கு வர வேண்டும். நிச்சயம் எமது மக்களுக்கு இப்படியான உற்பத்தியாளர்கள் தேவை. அதனூடாக எமது மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும். நிச்சயம் நீங்கள் வரவேண்டும் என்று கூறியிருந்தார்.

அதன் பிரகாரம் அவருடைய முழு ஒத்துழைப்புடனு் தான் நான் 2004ஆம் ஆண்டு இங்கே வந்து இந்த மின் உற்பத்தி செயன் முறையைச் செய்ய வேண்டும் என்ற மனப் பாங்கு உருவாகியது. அதன் மூலம் அனைவரது பாராட்டுக்களையும் பெற்றுள்ளேன்.

***இந்த மின் உற்பத்தி செயன் முறையை உருவாக்க எவ்வளவு செலவு முடிந்திருக்கும் என்று கூறமுடியுமா?**

உற்பத்தி செலவு என்பதை நான் திட்ட வட்டமாகக் கூறமாட்டேன். ஏனெனில், ஒரு புதிய கண்டு பிடிப்பை நாம் மேற்கொள்ளும் போது அதற்குரிய செலவு குறையலாம் அல்லது கூடலாம் அதற்காக நாங்கள் செலவைப் பார்த்து முயற்சியைக் கைவிடவில்லை. எவ்வளவு செலவானாலும் எனது சொந்தப் பணத்தில் செலவழித்தேன். மிகுதி என்னுடைய மகன்மாரிடம் இருந்து பெற்றுத்தான் செய்து முடித்துள்ளேன்.



*** இந்தப் பாட்சார்த்தமான செயன் முறையை இந்த இடத்தில் மேற்கொள்ள உங்களுக்கு உதவி புரிந்தவர்கள் அல்லது ஒத்துழைப்பு நல்கியவர்கள் யார் என்று கூறமுடியுமா?**

இவ்விடத்தை அதாவது, கிளிநொச்சி ஜெயந்தி நகரில் அமைந்துள்ள சமுதாய முன்னேற்ற நிலைய வளாகத்தில் இதை நான் மேற்கொள்ள இந்த இடத்தையும், அதற்குரிய ஒழுங்கமைப்புக்களையும் செய்து தந்தவர் இந்நிலையத்தின் பொறுப்பாளர் திருக்குமரன் ஆவார். அரசியல்துறைப் பொறுப்பாளர் மற்றும் துணைப் பொறுப்பாளர் ஆகியோரும் ஒத்துழைப்பு நல்கியிருந்தனர்.

அத்துடன் இதை நான் வெற்றிகரமாக முடிப்பதற்கு என்னுடன் இரவு பகலாக வேலை செய்தவர்கள் குட்டி, வாவுஜி, குமார் என்ற மூன்றுபேரும் கடுமையாக உழைத்தார்கள். அவர்கள் மூலமே அடுத்து இரணைமடுவில் மேற்கொள்ளும் மின் உற்பத்தித் திட்டத்தை செய்து முடிப்பேன் என்ற நம்பிக்கையும் உண்டு.

அடுத்த வருடம் சித்திரை மாதப் பகுதியில் அதன் வேலை ஆரம்பமாகி அனைவரும் வியர்ந்து நிற்கக் கூடிய அளவிற்கு மின் உற்பத்தியைச் செய்வேன் என்ற எண்ணத்துடன் வெளிநாடு செல்கின்றேன். நிச்சயம் திரும்பி வந்து அதனைப் பூர்த்தி செய்து தருவேன் என்று உங்களுக்குக் கூறி விடை பெறுகின்றேன். ★ ★ ★

# கடந்த வாரத்தில்...

**08.11.2004-14.11.2004**



நோர்வே வெளியுறவு அமைச்சருடனான சந்திப்பில்...

## 08

★இந்திய மீனவர்கள் தாயகக் கடற் பரப்பினுள் அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதைக் கண்டித்து மன்னார் பேசாலை மீனவர்கள் மேற்கொண்ட வீதி மறியற் போராட்டம் கைவிடப்பட்டது.

★முன்னாள் யாழ்.மாவட்ட தமிழீழ நிர்வாகப் பொறுப்பாளர் லெப்.கேணல் தூயவனின் 5ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் தூயவன் அரசறிவியற் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.



தூயவன் நினைவாக...

★வாழைச்சேனை படையதிகாரியின் வாகனம் மீதான தாக்குதலுக்கு விடுதலைப் புலிகள் கண்டனம்.

★நோர்வே விசேடதுாதுவர் எரிக்சூல்ஹெய்ம் கொழும்பிற்கு விஜயம்.

## 09

★தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன பாலசிங்கம் கிளிநொச்சி வந்தடைந்தார்.



கிளிநொச்சி வருகை.

★நோர்வேயின் சிறப்புத்தூதுவர் எரிக்சூல் ஹெய்ம் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினரைச் சந்தித்தார்.

★முரசுமோட்டைப் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் குடும்பப்பெண் பரிதாப மரணம்.

★பொலிஸ், நீதித்துறைகளில் ஊழல் மோசடிகள் அதிகரித்துள்ளதென சனாதிபதி சந்திரிகா சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்ற கூட்டத்தில் தெரிவிப்பு.

★முஸ்லிம் காங்கிரஸ் தலைவரை எரிக்சூல்ஹெய்ம் சந்தித்தார்.

## 10

★பிரிட்டிஷ் இராணுவ உயரதிகாரிகள் இருவர் மட்டக்களப்பிற்கு விஜயம்.

★சிறிலங்காவின் வெளிநாட்டு வேலை வாய்ப்புத்துறை பிரதியமைச்சர் மேர்வின் சில்வா இராஜினாமா செய்தார்.

★கிளிநொச்சியில் தமிழீழ சட்டக்கல்லூரி யின் புதிய கட்டடத்தை திருமதி. அடேல் பாலசிங்கம் திறந்துவைத்தார்.



புதியகட்டடம் திறப்பு

★விடுதலைப்புலிகளுக்கும் கண்காணிப்புக் குழுவினருக்குமிடையில் மன்னாரில் சந்திப்பு இடம்பெற்றது.

## 11

★தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரனை நோர்வே வெளியுறவு அமைச்சர் ஜோன்பீற்றர்சன் தலைமை யிலான சமாதானத் தூதுக்குழுவினர் சந்தித்தனர். நோர்வேயின் அனுசரணையா ளர்கள் ஊடாக சந்திரிகா புதிய தகவல் எதையும் கூறிவிடவில்லை. நாங்கள் தான் புதிய செய்தியொன்றினை அனுப்பியுள் ளோம் என தலைவர் பிரபாகரன் அவர்களுக்கும், நோர்வே வெளிவிவகார அமைச்சர்களுக்குமிடையேயான சந்திப்புக் குறித்து அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்தார்.



செய்தியாளர் மாநாட்டில்.


★யசீர் அரபாத்திற்கு தேசியத் தலைவர் சார்பிலும் எமது விடுதலை இயக்கம் மக்கள் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம் என சமாதானச் செயலகத்தில் அரசியல்துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் செய்தியாளர் களிடம் தெரிவித்தார்.

★வன்னிக்கு விஜயம்செய்திருந்த நோர்வே, யின் வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் கொழும்பிற்குச் சென்று சனாதிபதியைச் சந்தித்தனர்.

★நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன்பீற்றர்சன் நாடு திரும்பினார்.

## 12

★நோர்வே வெளியுறவுத்துறை துணை அமைச்சர் விதார்ஹெல்கேசன் எதிர்க்கட்சித் தலைவரை சந்தித்தார்.



ரணிலுடன் சந்திப்பு...

★மணலாறு மாவட்டத்தளபதியாக இருந்த லெப்.கேணல் அன்புவின் 11ஆம் ஆண்டு நினைவுநாள் மணலாற்றில் அனுஷ்டிக்கப் பட்டது.



11ஆம் ஆண்டு நினைவு நிகழ்வில்

★1994இல் இடப்பட்ட சமாதானத்திற்கான அடித்தளம் 2001ஆம் ஆண்டில் சீர்குலைக் கப்பட்டது என சனாதிபதி தனது 10ஆண்டு பதவிக்காலம் பூர்த்தி அடைவதை முன்னிட்டு கம்பஹாவில் உரையாற்றிய வேளை தெரிவித்தார்.

★தமிழீழ விடுதலைப்புலிகளின் தளபதி களான கேணல் பாணு, கேணல் சொர்ணம் இருவரும் கிழக்கிலிருந்து கிளிநொச்சியை வந்தடைந்தனர்.



தளபதிகள் வருகை.

★விடுதலைப்புலிகளும்-படையினரும் மட்டக்களப்பில் சந்தித்தனர்.

## 13

★இனம் தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி மன்னாரில் ஒருவர் பலி.

★மானிப்பாயில் மாணவன் ஒருவன் சுருக்கிட்டுத் தற்கொலை.

★விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோ சகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் லண்டன் பயணமானார். லண்டன் செல்லும் வழியில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நோர்வே யின் சிறப்புத்தூதுவர் எரிக்சூல் ஹெய்மைச சந்தித்தார்.



லண்டன் பயணம்.

★பூநகரித் தளம் மீதான தவளைப் பாய்ச்சல் நடவடிக்கையில் 11ஆம் ஆண்டு வெற்றிவிழா பூநகரியில் கொண்டாடப் பட்டது.



தவளைப்பாய்ச்சல் வெற்றிவிழா

★நோர்வே சமாதானத்தூதுவர் எரிக் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதிகளைச் சந்தித்தார்.

## 14

★கொடிகாமம்-இராமாவில் பகுதியில் இராணுவத்தின் நீர்த்தாங்கி வண்டி மோதியதில் இளைஞன் ஒருவர் பரிதாப மரணம்.



விபத்தில் பரிதாப மரணம்.

★சமாதானத்தீர்விற்கும் தயார் சண்டைக் கும் நாம் தயார் என அமைச்சர் அநுரா பொதுக்கூட்டம் ஒன்றில் தெரிவிப்பு.

★பாகிஸ்தான் கப்பல்கள் மூலம் ஆயுத தளபாடங்கள் கொழும்புத்துறைமுகத்தை வந்தடைந்தன.

# திருமலையில் மாவீரர் நாளை முன்னிட்டு மகளிர் சங்கங்கள் ஏற்பாட்டில் சங்கமம்

(திருமலை)

மாவீரர் நாளை முன்னிட்டு திருகோண மலை மாவட்டத்தில் வரோதயநகர், புதுக்குடியிருப்பு மகளிர் சங்கங்களின் ஆதரவில் பெண்களின் சங்கம நிகழ்வு நேற்று முன்தினம் மாலை பாரதி வித்தி யாலயத்தில் நடைபெற்றது. ஆரம்பத்தில் திருமலை. மாவட்ட மகளிர் அரசியல் துறைப் போராளி நளினி தமிழீழத் தேசியக்கொடியை ஏற்றினார். பின்னர் திருமதி. சித்திதேவி பத்மநாதன் பொது ஈகச்சுடரை ஏற்றி வைத்தார்.

திருமதி. கமலேஸ்வரன் சந்திரகுமாரி தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் வரவேற்புரை, தலைமையுரையின் பின்னர் வரோதயநகர், புதுக்குடியிருப்புப் பகுதி மாதர்சங்கங்களின் சார்பில் தேசியத் தலைவர் பிரபாகரனுக்கு அனுப்பவிருக் கும் பிறந்தநாள் வாழ்த்துச்செய்தியை திருமலை மாவட்ட மாதர்சங்கங்களின் ஒன்றியத் தலைவி திருமதி. இரத்தினவடி வேல் கண்மணி வாசித்து வரோதயநகர் மாதர்சங்கத் தலைவி திருமதி. தர்மலிங் கம் செல்வமலரிடம் கையளிக்க, அவர் அதனை தேசியத்தலைவருக்கு அனுப்பி வைப்பதற்காக திருமலை மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் செல்வி.காருண்யாவிடம் ஒப்படைத்தார். பின்னர் திருமதி. சித்திதேவி பத்மநாதன், வல்வை, என்.அனந்தராஜ், விமலநாதன், மாவட்ட மகளிர் அரசியல்துறை பொறுப் பாளா காருண்யா ஆகியோர் உரை யாற்றினர். (25)

## வடக்கு கிழக்கு மாகாண சபை

## போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம் (கார்ப்)

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
“ஆஅவ” கடன் இல. 2043 – SRI (SF)

# கேள்வி அறிவித்தல் இல: 35

## குடிசார் வேலைகளைப் பெறுதல்

01. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டத்தின் (கார்ப்) ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன் கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் ஒரு பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்து தொழில்தருனராக குறிப்பிடப்படும் NECORD கருத்திட்டப் பணிப்பாளர் சார்பாக கேள்விச் சபையின் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலைப் பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | AM/CAARP/HS/11 | திருக்கோவில் மாவட்ட வைத்தியசாலையில் 40 படுக்கைகள் கொண்ட பெண்கள் விடுதி நிர்மாணம். | M6 (கட்டடங்கள்) | 61,000/= |
| 02 | AM/CAARP/HS/11 | திருக்கோவில் மாவட்ட வைத்தியசாலையில் ஆண்கள் விடுதி, மகப்பேற்று விடுதி மற்றும் சமையலறை ஆகியவற்றின் திருத்தவேலை | M7 (கட்டடங்கள்) | 35,000/= |
| 03 | MU/CAARP/RD/01 | ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு வீதியில் கிரவல் பரப்பி உறுதியாக்கி தார் போட்டு மணல் பரவுதல் 0-2 கிலோ மீற்றர் | M7(நெடுஞ்சாலை) | 40,000/= |
| 04 | MU/CAARP/RD/01 | ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு வீதியில் கிரவல் பரப்பி உறுதியாக்கி தார் போட்டு மணல் பரவுதல் 2-4 கிலோ மீற்றர் | M7 (நெடுஞ்சாலை) | 40,000/= |
| 05 | VA/CAARP/RD/01 | கனகராஜன்குளம் நெடுங்கேணி வீதியில் கிரவல் பரப்பி உறுதியாக்கி தார் போட்டு மணல் பரவுதல் 0 -2 கிலோ மீற்றர் | M6 (நெடுஞ்சாலை) | 53,000/= |
| 06 | VA/CAARP/RD/01 | கனகராஜன் நெடுங்கேணி வீதியில் கிரவல் பரப்பி உறுதியாக்கி தார் போட்டு மணல் பரவுதல் 2-3.5 கிலோ மீற்றர் | M7 (நெடுஞ்சாலை) | 31,900/= |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

I. நிருமாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (NCCASL) உறுப்பினராக (ICTAD மேற்படி M7 க்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும் ) விளங்க வேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களில் ஆகக் குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலையில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். அல்லது கிளிநொச்சி, முல்லைத்தீவு, அம்பாறை மாவட்டங்களில் 2003.07.01 ந் திகதிக்கு பின்பு தங்களை ஒப்பந்தக்காரர்களாக பதிவு செய்து ஒத்ததன்மையான வேலைகளை ஒப்பந்தக்காரர்களாகவோ அல்லது உப ஒப்பந்தக்காரர்களாகவோ இத்தகைய வேலைகளை நல்லமுறையில் செய்துமுடித்தவர்களாக இருக்க வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து பெறப்பட்ட சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்படல் வேண்டும்.

IV. “ ICTAD” வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. மோசடியான, அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்திறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

VI. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

04. ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

05 தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலும் தகவலை கருத்திட்டப் பணிப்பாளர் அலுவலகம், **NECORD, 55,** கந்தசாமி கோவில் வீதி, திருகோணமலையில பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி 026 – 2227434, தொலைநகரி 026 – 2227401, மின்னஞ்சல் necord@sltnet.lk).

06 ஒப்பந்த ஆவணங்களை 2004 கார்த்திகை 12 இல் இருந்து 2004 கார்த்திகை 25 வரை முற்பகல் 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து, மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 1000/= செலுத்தி கொள்வனவு செய்யப்படலாம்.

07 கேள்விகோருவோர் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், பொறிவைக்கப்பட்ட இரு உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும் கொண்டிருக்க வேண்டும்.

08 அவ்வவ் வேலைகளுக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் தலைவர், கேள்விச்சபை, **NECORD, 55,** கந்தசாமி கோவில் வீதி, திருகோணமலை என்ற முகவரிக்கு 2004 மார்கழி 03 முற்பகல் 11.30 மணிக்கு முன்பதாக கிடைக்க அனுப்பப்படல் வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

09. முன்கூட்டிய ஒப்பந்தக் கூட்டமொன்று 2004 கார்த்திகை 25 முற்பகல் 11.30 க்கு **NECORD, 55,** கந்தசாமி கோவில் வீதி, திருகோணமலை என்ற முகவரியிலுள்ள எமது காரியாலயத்தில் நடைபெறும்.

10 கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு, அல்லது செலவினங்களுக்கு தொழில்தருனர் பொறுப்பாகமாட்டார்.

த. லங்காநேசன்,
கேள்விச்சபை தலைவர்,
வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம்,
55, கந்தசாமி கோவில் வீதி, திருகோணமலை.

(சி-10763)

## மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு
## வடக்கு-கிழக்கு மாகாண சபை

# போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம் (கார்ப்)

**ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது. "ஆஅவ" கடன் இல. 2043 – SRI (SF).**

# கேள்வி அறிவித்தல் இல: 32

# குடிசார் வேலைகளைப் பெறுதல்

1. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டத்தின் (கார்ப்) ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன் கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் ஒரு பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. இதன் பின்னகத்து தொழில் தருனராக குறிப்பிடப்படும் ஆளுநரால் நியமிக்கப்பட்ட கேள்விச் சபையின் தலைவரால் பின்வரும் ஒப்பந்தத்திற்கு தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த (ICTAD) பதிவு | கேள்வி பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | MU/CAARP/HS/04 | முல்லைத்தீவு, மாவட்ட பொது வைத்தியசாலை நிர்மாணம்.வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு தொகுதி - I | M3 | 1,000,000/= |

3. நிர்மாணப்பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவு தரப்படுத்தலின் கீழ் M3 (கட்டடங்கள்) அல்லது அதற்கு மேலான தரத்தில் தம்மை உள்ளூர் ஒப்பந்தக்காரர்களாக பதிவு செய்து கொண்ட எல்லா கம்பனிகளுக்கும் இலங்கை தேசிய ஒப்பந்தக்காரர் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கும் (NCASL) அல்லது ஆசிய அபிவிருத்தி வங்கியின் அங்கத்துவ நாடொன்றைச் சார்ந்த வெளிநாட்டு ஒப்பந்தக்காரர்களுக்கும் கேள்விகள் திறந்துள்ளது.

4. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் கேள்வி சம்பந்தமான மேலதிக தகவல்களை திட்டப் பணிப்பாளர், 140, மின்சாரநிலைய வீதி, திருகோணமலை என்னும் முகவரியில் பெற்றுக்கொள்வதோடு கேள்வி ஆவணங்களையும் பரிசீலனை செய்யலாம்.

   தொ.பே.:026–2227434, பக்ஸ்:026–2227401, ஈமெயில்: necord@sltnet.lk

5. ஒப்பந்த ஆவணங்களை 2004 புரட்டாதி 22 இல் இருந்து 2004 ஐப்பசி 18 வரை காலை 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து இது தொடர்பாக மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 10,000/= த்தை (கேள்வி ஆவணம் ஒன்றுக்கு) செலுத்தி கொள்வனவு செய்து கொள்ளலாம்.

6. கேள்வி கோருபவர் முன் தகுதிக்கு அவசியமான ஆவணமும் விலையிடப்பட்ட கேள்விகளின் இரண்டு பிரதிகளும் பொறிவைக்கப்பட்ட தனித்தனி உறைகளில் 7 வது பந்தியில் குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட திகதி, நேரத்தில் கையளிக்கப்பட வேண்டும்.

7. அவ்வேலைக்குரிய ஒப்பந்தப் பிணைமுறியுடன் பொறிவைத்த அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் உரிய பிணைப்பணத்துடன் தலைவர், ஆளுநரால் நியமிக்கப்பட்ட கேள்விச்சபை, NECORD, 140, மின்சாரநிலைய வீதி, திருகோணமலை என்ற முகவரிக்கு 2004 கார்த்திகை மாதம் 08 ஆம் திகதி பிற்பகல 2 மணிக்கு முன்பதாக கிடைக்க வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.


8. முன்கூட்டிய கேள்விகோரல் கூட்டமொன்று மேற்படி அலுவலகத்தில் 2004 ஐப்பசி மாதம் 22 ஆம் திகதி அன்று பிற்பகல 2 மணிக்கு நடைபெறும்.

9. கேள்வி தயாரிப்பதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

**சி. ரங்கராஜா,**
பிரதம செயலாளர்,
தலைவர்,
ஆளுநரால் நியமிக்கப்பட்ட கேள்விச்சபை,
வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிக்கோட்)
திருகோணமலை.

(சி-10764)

# 2012 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியை நடத்தும் அதிக வாய்ப்பு இங்கிலாந்துக்கு



2012ஆம் ஆண்டு சர்வதேச ஒலிம்பிக் போட்டிகளை லண்டனிலுள்ள பிட் மைதானத்தில் நடத்துவதற்கு அதிக வாய்ப்புகள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்போட்டியை நடத்துவதற்கு மேலும் பரிஸ், மெட்றிட், நியூயோர்க் மொஸ்கோ போன்ற நகரங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி வரும் பெப்ரவரி, மார்ச் மாதங்களில் அங்கு சென்று பரிசீலனை நடத்தி ஜூன் மாதமளவில் தேர்தலை நடத்தத் திட்டமிட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த மே மாதம் சர்வதேச ஒலிம்பிக் க்மிட்டி அறிவித்தபடி பரிஸ் முதலாமிடத்திலும், மெட்ரிட் இரண்டாம் இடத்திலும், லண்டன் மூன்றாம் இடத்திலும் உள்ளன.

எனினும் இரசிகர்களின் விருப்பத்திற்கே முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என லண்டன் பிட் மைதான முகாமையாளர் லோர்ட்கோ பி.பி.சியிடம் தெரிவித்துள்ளார்.

1998இல் உலகக்கிண்ண கால்பந்தாட்டமும் 2003இல் உலக மெய்வல்லுநர் போட்டிகளும் பரிசில் நடைபெற்றதால் அங்கு ஏற்கனவே வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ஆனால் லண்டனில் இணையத்தளப் பரிமாற்றங்கள் மைதானத்தின் விஸ்தீரணம் மக்களின் ஆதரவு என்பவை பற்றி சிந்திக்க வேண்டும் என சர்வதேச ஒலிம்பிக் சங்கம் தெரிவித்துள்ளது.

ஆனால் இவை தொடர்பாக கடந்த மேயில் ஆராயப்பட்டதாகக் கோ தெரிவிக்கிறார். அத்துடன் ரசிகர்களின் போக்குவரத்து வசதிகள் மற்றும் வசதிகள் பற்றி ஆராயவரும் குழுவினர் இதுபற்றி சாதகமான முடிவெடுப்பர் எனவும் லோட்கோ நம்பிக்கை தெரிவிக்கிறார்.

2005இல் பரிசோதனை நடத்தப்படும் தினங்களும் இடங்களும்:-

மட்றிட்:பெப்ரவரி 3-6, லண்டன்:பெப் 16-19, நியூயோர்க்:பெப் 21-24, பரிஸ்:மார்ச் 9-12, மொஸ்கோவ்: மார்ச் 14-17

முடிவுகள் 128பேர் அடங்கிய சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி குழுவினரால் வரும் 2005 ஜுலையில் அறிவிக்கப்படும்.

# மகளிர் ஹொக்கி சம்பியன் இறுதிப்போட்டி ஜேர்மனியை வீழ்த்தியது நெதர்லாந்து



மகளிருக்கான ஹொக்கி சம்பியன் கோப்பையை நெதர்லாந்து மூன்றாவது முறையாகக் கைப்பற்றியது. பியூனஸ் அயர்ஸின் வடக்கே 300 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள ரொசாரியோவில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் ஜேர்மனியை 3-2 என்ற கோல் கணக்கில் சாய்த்தது நெதர்லாந்து இதன் மூலம் எதென்சில் ஒலிம்பிக்கில் பெற்ற தோல்விக்குப் பழி தீர்த்துக்கொண்டது நெதர்லாந்து. கடந்த ஓகஸ்டில் எதென்சில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் 2-1என்ற கோல் கணக்கில் நெதர்லாந்தைத் தோற்கடித்து தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியது ஜேர்மனி. சம்பியன் கோப்பையை நெதர்லாந்து ஏற்கெனவே 1987,2000 ஆண்டுகளில் வென்றுள்ளது. முன்னதாகநடைபெற்ற லீக் ஆட்டத்தில் இவ்விரு அணிகளும் தலா ஒரு கோல் போட்டு சமன் கண்டது குறிப்பிடத்தக்கது.


# தினேஷ் மொங்கியா சிறப்பாட்டம் பயிற்சிப்போட்டி சமநிலையில் நிறைவு

தினேஷ் மொங்கியாவின் சிறப்பான ஆட்டத்தால் தென் ஆபிரிக்காவுக்கு எதிரான 3 நாள் கிரிக்கெட் ஆட்டத்தில் வலுவான நிலையைப் பெற்றுள்ளது இந்திய போர்டு பிரசிடென்ட் லெவன் அணி.

ஜெய்ப்பூரில் திங்கட் கிழமை நடைபெற்ற 2ஆம் நாள் ஆட்ட முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 320 ஓட்டங்களைச் சேர்த்துள்ளது பிரசிடென்ட் லெவன் அணி.

தென் ஆபிரிக்காவின்இன்னிங்சைக் காட்டிலும் இது 94 ஓட்டங்கள் அதிகம். தினேஸ் மொங்கியா 135 ஓட்டங்களுடனும், பதானி 21 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர். முன்னதாக,கீப்பர் எம். எஸ்.டோனி 6 பவுண்டரி,ஒரு சிக்ஸர் உட்பட 39 ஓட்டங்களை கிடுகிடுவெனக் குவித்து ரசிகர்களுக்கு விருந்தளித்தார். காம்பீர் 26 ஓட்டங்களிலும் சடகோபன் ரமேஷ் 9ஓட்டங்களிலும்,ஜாதவ் 12 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். தென் ஆபிரிக்கா 5விக்கெட்டுக்கு 226ஓட்டங்களைச் சேர்த்து முதல் இன்னிங்சை டிக்ளேர் செய்தது.

தினேஷ் மொங்கியாவின் ஆட்டம் சமீபகாலமாக மிகவும் அபாரமாக இருக்கிறது. இங்கிலாந்து கவுண்டி கிளப்பில் சிறப்பாக விளையாடி னார். இதன் மூலம் அவர் இந்திய அணியில் மீண்டும் இடம் பிடிப்பதற்கான வாய்ப்பை எட்டியுள்ளார்.



தினேஷ் மொங்கியா 48 ஒருநாள்போட்டியில் விளையாடி இருக்கிறார். அவரது சராசரி 28 ஆகவுள்ளது. 2002 ஆம் ஆண்டு சிம்பாவேக்கு எதிராக அவர் 159 ஓட்டங்களை எடுத்தார்.கடந்த ஆண்டு உலகக் கோப்பை போட்டிக் கான அணியில் இடம் பெற்றாலும்வாய்ப்பு வழங்கப்படவில்லை. தினேஷ் மொங்கியா தனது அபாரமான ஆட்டம் மூலம் தேர்வுக் குழுவின் கவனத்தை பெற்றுள்ளார். இந்திய அணியில் தனக்கு மீண்டும் இடம்கிடைக் கும் என்பதில் அவர்உறுதியான நம்பிக்கையில் உள்ளார்.

# தலைவர் பதவியைக் கொடுத்திருந்தால் சிறப்பாக வழிநடத்தியிருப்பேன்

**— ஷேன் வோர்ன்**



அவுஸ்திரேலிய அணியின் தலைவர் பதவியைக் கொடுத்திருந்தால் அணியைச் சிறப்பாக வெற்றி பெற வைத்திருப்பேன் என்கிறார் உலகிலேயே அதிக விக்கெட்டுக்களை (541) சாய்த்த சுழற் பந்து வீச்சாளர் என்ற சாதனையைப் படைத்த ஷேன்வோர்ன். ஒரு நாள் போட்டிகளில் சில ஆட்டங்களில் இவர் தலைவராக இருந்திருக்கின்றார். அந்த ஆட்டங்களில் நன்றாகத் தலைமைப் பதவியை வகித்ததாக நினைவு கூருகின்றார். உலகக்கோப்பைப் போட்டிகளின் போது மார்க்வோ தலைவராகவும், இவர் துணைத்தலைவராகவும் ஆடியுள்ளனர்.

'இன்சைட் கிரிக்கெட்' என்ற பத்திரிகைக்கு ஷேன்வோர்ன் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது,. அவுஸ்திரேலிய அணிக்கு நான் தலைவராக ஆகியிருப்பேன். அப்போது நடந்த மருத்துவச் சோதனையின் போது ஊக்க மருந்து சாப்பிட்டதாகக் கூறிவிட்டனர். அணித் தலைவர் பதவிக்கு நான் ஆசைப்படவில்லை என்று கூறினால், அது மனதார நான் சொன்ன பொய்யாகத்தான் இருக்கும். நானும் அணித்தலைவராக விரும்பினேன். அப்படி எனக்கு வாய்ப்புக் கொடுத்திருந்தால் சிறப்பாக அணியை வழிநடத்தியிருப்பேன் என்றார்..




# கங்குலிக்கு தடை நீங்கியது டெஸ்ட் போட்டியில் விளையாடலாம்



டெஸ்ட் போட்டியில் விளையாட கங்குலிக்கு விதிக்கப்பட்டிருந்த தடயை தற்காலிகமாக நீக்குவதாக சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐசிசி) அறிவித்தது. இதையடுத்து தென் ஆபிரிக்க அணிக்கு ஏதிரான 2 டெஸ்ட் போட்டிகளிலும் கங்குலி விளையாட முடியும்.

முன்னதாக 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாட கங்குலிக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை எதிர்த்து மேன் முறையீடு செய்யப் போவதாக இந்திய கிரிக்கெட் (பிசிசிஐ) வாரியத் தலைவர் ரன்பீர் சிங் மகேந்திரா ஜெய்ப்பூரில் திங்கட்கிழமை அறிவித்திருந்தார்.

இதையடுத்து, தாக்கல் செய்யப்படக்கூடிய இந்த வழக்கில் தீர்ப்பு வரும் வரை கங்குலி விளையாட தடை எதுவும் இல்லை என்று ஐசிசி திங்கட்கிழமை திடீரென அறிவித்துள்ளது.

பிசிசிஐ அப்பீல் தாக்கல் செய்ததும், ஒரு உறுப்பினர் கொண்ட நடத்தை நெறி கமிஷன் இவ்வழக்கை விசாரித்து 7 நாட்களில் முடிவெடுக்கும் என்றும் ஐசிசி கூறியுள்ளது.

# பிரதேச ரீதியான மாவீரர் வெற்றிக்கிண்ண கால்பந்து போட்டி; சென் மேரீஸ் அணி தகுதி



முழங்காவில் விநாயகர் சென்சேவியர் அணிவீரர்கள்.

இதேவேளை மாவீரர் வெற்றிக் கேடயத்திற்கான கால்பந்து சுற்றுப்போட்டிகள் முழங்காவில் விநாயகர் விளையாட்டு மைதானத்தில் கடந்த 14 ஆம் திகதி நடைபெற்றன.

இதில் இறுதியாட்டத்திற்கு முழங்காவில் விநாயகர் விளையாட்டுக்கழகமும், நாச்சிக்குடா சென் மேரீஸ் விளையாட்டுக் கழகமும் தெரிவாகின.இதில் நாச்சிக்குடா சென் மேரீஸ் விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டியது. (கு)

பூநகரி பிரதேச விளையாட்டுத் துறையின் அனுசரணையுடன் இரணைமாதா சென் மேரீஸ் விளையாட்டுக்கழகம் நடாத்திய கால்பந்துச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் முழங்காவில் விநாயகர் அணி சம்பியனானது.

இதில் இறுதியாட்டத்திற்கு தெரிவாகிய மன்னார் தேவன் பிட்டி சென்சேவியர் விளையாட்டு கழகத்தை எதிர்த்து ஆடிய முழங்காவில் விநாயகர் அணி வெற்றியை சுவீகரித்துக் கொண்டது.

# ரஷ்யாவின் முன்னாள் வீரர் கபெல்னிகோவ் ஓய்வு பெற்றார்

ரஷ்யாவைச் சேர்ந்த முன்னாள் முதல்நிலை வீரரான கபெல்னிகோவ் டென்னிசில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

அவர் 1996ஆம் ஆண்டு பிரெஞ்சு ஓப்பன் பட்டத்தையும் 1999ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய ஓப்பன் பட்டத்தையும் கைப்பற்றியிருந்தார். சிட்னி ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் பெற்றார். அவர் கடைசியாக கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் விளையாடினார். இவர்10ஆண்டுகள் டென்னிஸ் விளையாடினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் வீதி ஓட்டப்போட்டி

தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு வவுனியாவில் நேற்றுமுன்தினம் (திங்கள்) ஓட்டப்போட்டி நடாத்தப்பட்டுள்ளது.

150 இற்கும் மேற்பட்ட ஆண், பெண் போட்டியாளர்கள் கலந்து கொண்ட இவ் ஓட்டப்போட்டி வவுனியா நகரசபை முன்பாக ஆரம்பமாகி ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லம் முன்பாக நிறைவு பெற்றது.

இதில் ஆண்களுக்கான போட்டியினை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் அவர்களும், பெண்களுக்கான போட்டியினை வவுனியா மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் திரு.தமிழ்மாறன் அவர்களும் ஆரம்பித்து வைத்தனர். (10)

# மென்பந்து கிரிக்கெட் போட்டி முல்லையில் நேற்று ஆரம்பம்


தமிழீழத் தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு முல்லைமாவட்ட தமிழீழ விளையாட்டு துறையினரின் அனுசரணையுடன் முல்லைப்பிரதேச வர்த்தக சங்கத்தினால் முல்லை மாவட்ட மட்டத்திலான மென்பந்துப் போட்டி உடுப்புக்குளம் அலை ஓசை விளையாட்டு மைதானத்தில் நேற்று ஆரம்பமானது.

முதலாவது போட்டியில் புதுக்குடியிருப்பு சுப்பர் ராங் எதிர் உடுப்புக்குளம் அலைஓசை அணிகள் மோதிக்கொண்டன. இப்போட்டி தொடர்ந்து ஆறுநாட்கள் நடைபெறும் எனவும், இறுதிப்போட்டி முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என முல்லை பிரதேசவர்த்தக செயலர் மனோ தெரிவித்தார். (20)



முன்னணி வீராங்கனைகளுக்கான WTA டென்னிஸ் போட்டியில் சம்பியன் பட்டம் வென்ற ரஷ்யாவின் மரியோ ஷெரபோவாவெற்றிக் கிண்ணத்தை முத்தமிடுகிறார்.

இவர் அமெரிக்காவின் செரினாவில்லியம்சை 4-6,6-2, 6-4 என்ற செட்கணக்கில் தோற்கடித்தார்.



## சிந்தனைக்கு

அரசியல் என்பது மக்கள் மீது ஆட்சியை நடாத்தும் அல்லது அதிகாரத்தைச் செலுத்தும் விவகாரம் அல்ல. அரசியல் என்பது மக்களுக்குச் சேவைபுரியும் பணி; மக்களின் நல்வாழ்வுக்கு ஆற்றப்படும் தொண்டு.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 17-11-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## வழிகாட்டியவர்களே தூசித்தால்!

நாட்டின் சட்டம் ஒழுங்கு ஆகியவற்றின் கௌரவம் மிகு தன்மையைப் பாதுகாப்பதற்கு இரண்டு நிறுவனங்கள் பொறுப்பாக உள்ளன. பொலிஸ் மற்றும் நீதித்துறை ஆகியவற்றின் நேர்மையானதும் செயற்திறன் மிக்கதுமான பங்களிப்பு இல்லாமையே நாட்டை முன்கொண்டு செல்ல முடியாமல் உள்ளதென்ற உண்மையைக் கூறியதற்காக நான் தூற்றப்படுகிறேன" எனச் சனாதிபதி சந்திரிகா பெரும் கவலை வெளியிட்டுள்ளார்.

அண்மையில் நடந்த கூட்டமொன்றில் இப்பிராந்தியத்தில் மிக மோசமான ஊழல் மிக்க பொலிஸ் மற்றும் நீதித்துறை இலங்கையில் உள்ளதென அவர் தெரிவித்ததைத் தொடர்ந்தே சனாதிபதி மீது கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டன. அவர் இத்துறைகளைச் சார்ந்தவர்களால் தூற்றப்பட்டார்.

சனாதிபதி சந்திரிகா தற்பொழுது கூறுவதுபோன்று, இதனை அவர் தெரிவிக்கவில்லை. இது தொடர்பாக சர்வதேச ரீதியில் ஆய்வு நடத்தும் முன்னணி நிறுவனமான "ரான்ஸ்பிரன்ஸி இன்ரநஷனல் நிறுவனமே கூறியது. ஆயினும் இப்பொழுது கூறப்படவில்லை. கடந்த ஆண்டின் தொடக்கத்திலோ அல்லது இவ்வாண்டின் தொடக்கத்திலோ அதுவும் கடந்த அரசாங்கம் ஆட்சியில் இருக்கும் போதே கூறப்பட்டது என்பது ஒருவகையில் உண்மையே. ஆனால் சனாதிபதி இக்குற்றச்சாட்டை இந்நிறுவனம் தான் கூறியது எனத் தனது முன்னைய பேச்சின் போது கூறவில்லை என்பது வேறு விடயம்.

சனாதிபதி சந்திரிகா "பொலிஸ் மற்றும் நீதித்துறை மோசடி மிக்கதாக இருப்பதற்கு குறித்த நிறுவனத்தினதோ அல்லது தனிப்பட்ட தவறோ அல்ல. மாறாக நாட்டை நிர்வகிப்பவர்களின் தவறே" என்று கூறுவதன் மூலம் இதற்கான பொறுப்பை அவர் ஏற்றுக் கொள்கின்றாரா என்று அர்த்தம் கொள்ளமுடியாது. ஏனெனில் அது உண்மையானால் சனாதிபதி சந்திரிகா அதற்குப் பொறுப்பேற்று மன்னிப்பு கோரியிருத்தல் வேண்டும். ஆனால் அவர் இதன் மூலம் இத்துறைகளைச் சார்ந்த பொறுப்பானவர்கள் மீதே குற்றம் சுமத்த முற்படுகின்றார்.

உண்மையில் இலங்கையில் ஊழல் மோசடி என்பன உச்சநிலை அடைந்தமைக்கு அரசியல் தலைமைத்துவங்களின் தவறான நடவடிக்கைகளே காரணங்கள் ஆகும். ஒருபுறத்தில் இன ஒடுக்குதலை நோக்கமாகக் கொண்ட அரசாங்கங்கள் சட்டத்தையும், நீதியையும் தவறான முறையில் கையாள்வதற்கு ஆயுதப்படைகளுக்கும், பொலிசாருக்கும், நீதித்துறைக்கும் அங்கீகாரம் அளித்திருந்தன. இது ஊழலுக்கும், மோசடிக்கும் வழிவகுத்தன.

மறுபுறத்தில் ஆட்சியாளர்கள் தமது தேவைக்காகவும், அதிகாரங்களைத் தக்கவைத்துக்கொள்ளவதற்காகவும் பொலிசாரையும், நீதித்துறையையும் பயன்படுத்திக்கொண்டனர். இவை இராணுவத்தையும், பொலிசாரையும், நீதித்துறையையும் சட்டம் ஒழுங்கிற்கு மாறாக நடத்தத்தூண்டியதோடு, ஊழல் மோசடிகளில் ஈடுபடவும் வழிகாட்டியது.

இன்று சனாதிபதி சந்திரிகா தனது ஆட்சிக்காலத்தை நீடிப்பதிலும், தொடர்ந்து அரசியலில் ஈடுபடவும், அதிகாரத்தில் இருப்பதற்குமான தீவிரமுயற்சியில் இறங்கியுள்ளார். இவை சட்டம் ஒழுங்கை மதிக்கும் செயற்பாடோ, அரசியலில் நாகரீகமான செயலோ அல்ல ஏனெனில் இவரின் இவ்விரு நடவடிக்கைகளுக்குமே தற்போதைய சட்டம் ஒழுங்கிற்கும் அரசியல்யாப்பிற்கும் முரணானதாகும்.

சனாதிபதியின் பதவிக்காலம் 2005இல் முடிவுறுகிறதா? 2006இல் முடிவுறுகிறதா? என்ற தற்போதைய நெருக்கடிக்கு 2006 டிசம்பரிலேயே முடிவடைகின்றது எனச் சனாதிபதி சந்திரிகா கூறுகின்றார். 2000ஆம் ஆண்டில் பிரதமநீதியரசர் முன்னால் இரகசிய மான முறையில் மூன்றாவது தடவையாக இரண்டாவது பதவிக்காலத்திற்காகத் தான் சத்தியப்பிரமாணம் செய்ததாக அவர் கூறிக்கொள்கின்றார். பிரதம நீதியரசரும் இவ்வாறு நடந்ததாக உறுதிசெய்ய முனைகிறார்.

ஆனால் ஆட்சித் தலைவியோ, அன்றி பிரதம நீதியரசரோ ஒரு பதவிக்காலத்திற்கு எவ்வாறு இருதடவை சத்தியப்பிரமாணம் செய்யலாம் என்றோ, சத்தியப்பிரமாணம் என்பது இரகசியமான முறையில் செய்யப்படுவது சம்பிரதாயங்களுக்கு மாறானது என்றே புரிந்துகொள்ள இயலாதவர்கள் என எவ்வாறு கூறமுடியும்? இதனை ஊழல் மோசடி என்று கூறாமல் எவ்வாறு கூறமுடியும்?

இவை ஒருபுறமிருக்க பொலிஸ் அதிகாரிகளின் நியமனம் இடமாற்றம், நீதிபதிகள், நீதியரசர்களின் நியமனம், இடமாற்றம் என்பவை யாவும் அரசியல் காரணங்களின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு தற்போதைய பிரதமநீதியரசரைத் தொடர்ந்தும் சனாதிபதி பதவியில் வைத்திருப்பதையே உதாரணமாகச் சுட்டிக்காட்ட முடியும். அதாவது பிரதம நீதியரசரின் நன்நடத்தை தொடர்பான குற்றச்சாட்டு எழுந்துள்ளபோதும் சனாதிபதி அதனைப்பொருட்படுத்தாது பிரதம நீதியரசரை பதவியில் தொடர்ந்தும் வைத்துள்ளார். இது எந்தவகையில் நியாயப்படுத்தத் தக்கது. சட்டம் ஒழுங்கிற்கும், நீதிக்கும் இது முரணானதாக இல்லையா?

சனாதிபதி சந்திரிகா பொலிஸ் மற்றும் நீதித்துறை குறித்து தனது சுய மதிப்பீட்டின்படி கூறினாரோ அன்றி "ரான்ஸ்பரன்ஸி" இன்ரநஷனல் அறிக்கையின்படி கூறினாரோ எதுவாகிலும் சரி, அவர் கூறியது உண்மையே. ஆனால் சனாதிபதியின் கூற்றுக்களினால் இத்துறைசார்ந்தவர்கள் சினமுற்றதும், தூற்றமுயன்றதும் சரியானதே. ஏனெனில் இதற்குவழி காட்டியவர்களே பொது மேடையில் குற்றம் சுமத்தும்போது யாருக்குத்தான் கோபம் வராது. தங்களைப் பயன்படுத்திவிட்டு தூசிப்பவர்களை யார்தான் நேசிப்பார்கள்?

# அரசாங்கம் வாக்குறுதிகளை நிறைவேற்றாது

# ரணிலை வீழ்த்துவதிலே குறியாகவுள்ளது

(கொழும்பு)

தற்போதைய கூட்டணி அரசாங்கம் பதவிக்கு வரும் முன்பு மக்களிற்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் நாட்டில் பல பிரச்சினைகள் அதிகரித்துள்ள நிலையில் அடுத்துவரும் சனாதிபதித தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை எவ்வாறு தோல்வியுறச் செய்வது என்ற திட்டத்திலேயே கண்ணும் கருத்துமாக இருப்பதாக களுத்துறை மாவட்ட ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனரத்ன தெரிவித்துள்ளார். கொழும்பில் கடந்த 14ஆம் திகதி நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேலும் கூறியுள்ளதாவது;

சந்திரிகா எவ்வாறாயினும், 2005 நவம்பரின் பின் ஒரு நாளாவது பதவியிலிருக்க முடியாது என்று தெரிவித்த அவர் அவ்வாறு பதவியிலிருப்பின் எந்தத் திட்டத்தின் கீழ் அவருக்கு ஊதியம் வழங்கப்படும் என வினாவெழுப்பினார். அதனையும் மீறி அவர் பதவியிலிருப்பாராயின் ஆயிரக்கணக்கான மக்களைத் திரட்டி வீதி மறியல் போராட்டத்தில் இறங்கப்போவதாகவும் அவர் கூறினார்.

சந்திரிகா 10ஆம் ஆண்டு பதவிக் காலத்தைக் கொண்டாடினார். ஆனால், 94ஆம் ஆண்டு முதல் இன்று வரை அவரால் மக்கள் அனுபவித்த கஷ்டங்கள் ஏராளம் அவருடைய காலத்திலேயே கட்டுநாயக்க விமான நிலையம், மத்திய வங்கி மற்றும் முக்கிய பொருளாதார மையங்கள் அழிக்கப்பட்டன என்று கூறிய அவர் இவ்வரசாங்கத்தின் முதலாவது வரவு செலவுத்திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. மக்களுக்கு இதன் மூலம் என்ன நன்மை கிடைக்கப்போகிறது என்று பார்க்க வேண்டும்.

ஆயினும், கூட்டணி அரசின் முக்கிய பங்காளியான லால்காந்த அன்று ஆயிரம் ரூபாய்க்கு கொள்வனவு செய்த பொருள் இன்று 5 ஆயிரம் ரூபா என்று கூறியமைக்கு பாராட்டுத் தெரிவிக்க வேண்டும் என்று கூறிய ராஜித சேனாரத்ன ஜே.வி.பி. தனது மறைந்த உறுப்பினர்களுக்கு அஞ்சலி நடத்தும் வேளை விமல் வீரவன்ச பிரான்சில் தங்கி சுகமனுபவிப்பது கட்சிக்குள் பிரிவினை தோன்றும் அறிகுறியைக் காட்டுகின்றது என்றார்.

# தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்

# சிறிலங்காவின் பத்திரிகைச் சுதந்திரத்திற்கு சான்று

## வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் கண்டனம்

(கொழும்பு)

பத்திரிகைச் சுதந்திரத்தைப் பேணிப் பாதுகாப்பதாக சிறிலங்கா அரசு சர்வதேச ரீதியாக பிரச்சாரப்படுத்தும் அதேநேரம் தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் எந்தவிதமான மாற்றமும் இல்லாமல் தொடர்கிறது என வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் கண்டித்துள்ளது. இந்த வகையில் தமது அன்றாடப் பணிகளான சுயாதீனமான செய்தி சேகரிப்பதிலும் செய்திகளை வெளியிடுவதிலும் தமிழ் ஊடகவியலாளர்களுக்குள்ள நெருக்கடிகள் மாற்றம் இன்றியே இருப்பதாக சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கண்டனம் வெளியிடப்பட்டுள்ளது. தமிழ் ஊடகவியலாளர் தாக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எதிர்வரும் காலங்களில் அவ்வாறான அசம்பாவிதங்கள் இடம்பெறமாட்டாது என உறுதிகூறப்படுகின்றது. ஆனால் அந்த உறுதிமொழிகள் எந்தச் சந்தர்ப்பத்திலும் உரியதரப்புக்களால் கடைப்பிடிக்கப்படுவதில்லை எனச் சுட்டிக்காட்டியுள்ள வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் நேற்றைய தினமும் தென்மராட்சிச் சம்பவத்தில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் பாதுகாப்புத்தரப்பினரால் தாக்கப்பட்டுள்ளமையை தமது சங்கம் வன்மையாகக் கண்டிப்பதாக சங்கத்தின் தலைவர் செல்லப்பா கதிர்காமத்தம்பி தெரிவித்துள்ளார். இது குறித்து சுதந்திரப் பத்திரிகையாளர் சங்கப் பேச்சாளர் சுனந்த தேசப்பிரிய கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளார். (32)

# பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஒருபகுதியை விற்று

# பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிக்க முயற்சி

## நிதியமைச்சர் சரத் அமுனுகம தகவல்

(கொழும்பு)

பணவீக்க அதிகரிப்பு, வெளிநாட்டு நாணய கையிருப்புக் குறைந்து வருதல், வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை அதிகரிப்பு போன்ற நெருக்கடிகளைச் சமாளிப்பதற்காக இலங்கை இந்தியாவிடமிருந்து கிடைக்கக்கூடிய வெளிநாட்டு நாணயத்தை எதிர்பார்த்துள்ளது.

சிறிலங்கா பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஒரு பகுதியைப் பாரத் பெற்றோலியத்திடம் விற்று அதிலிருந்து வரும் பெருமளவு பணத்தைக் கொண்டே நிதி நெருக்கடியைச் சமாளிக்க வேண்டியுள்ளதாக நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார். பாரத் பெற்றோலியத்திற்கு விற்பதன் மூலம் கிடைக்கும் பணம் இலங்கை ரூபாயைக் காப்பாற்ற மிகவும் அவசியமானது. தற்போதைக்கு எமக்கு வேறு மாற்று வழிகளில்லை. நீண்டகால அடிப்படையில் உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பயணச் சீட்டுக்கள் வழங்காத

# 166 நடத்துநர்கள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

பயணிகளிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டு பயணச் சீட்டுக்களை வழங்காத 166 பஸ் நடத்துநர்களை சேவையிலிருந்து இடை நிறுத்தியுள்ளதாக சிறிலங்காவின் மத்திய போக்குவரத்துச் சபை நேரக்கணிப்பீட்டுப் பிரதி முகாமையாளர் டி.ஏ.அழகோன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை பேருந்துகளில் பணம் செலுத்தாமல் பயணம் செய்த பயணிகளைத் திடீர் சோதனைக்குட்படுத்திய அதிகாரிகள் 1,56,375 ரூபாயை அபராதமாக அறவிட்டுள்ளனர். அவர்களைக் கண்டுபிடிப்பதற்கென 99 விசேட குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டதாகவும் அவர்கூறினார். அத்துடன் ஊவா மற்றும் வடக்கு பேருந்து கம்பனிகளிலேயே இந்த மோசடிகள் இடம்பெற்றுள்ளன.

# சோளம், சோயா அவரைக்கான இறக்குமதி வரி அதிகரிக்கும்!

## உற்பத்தியை உயர்த்தத் திட்டம்

(கொழும்பு)

சோளம் மற்றும் சோயா அவரைப்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகளின் நலன் கருதி வெளிநாட்டிலிருந்து அவற்றை இறக்குமதி செய்வதற்கான வரி அதிகரிக்கப்படுமென சிறிலங்காவின் சுகாதாரப் பிரதியமைச்சர் மகிந்தயாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

அனுராதபுர மாவட்டத்தில் கலென் பிந்துனுவெவப் பகுதியில் சோளச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் பிரச்சினைகளை அறியும் பொருட்டும் 4000 ஏக்கரில் செய்கை பண்ணப்பட்டுள்ள சோளப் பண்ணையைப் பார்வையிடவும் சனாதிபதியின் விசேட பணிப்பின் பேரில் சுகாதாரப்பிரதி அமைச்சர் ரீ.பி.ஏக்க நாயக்க கடந்த ஞாயிற்றுக்கிழமை கலென் பிந்துனுவெவப் பகுதிக்கு விஜயம் செய்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

## முன்னேற்பாட்டு நடவடிக்கை

(மன்னார்)

மன்னார் வங்காலையில் குடிமனைகளுக்கு அருகே உள்ள பெரிய மரங்களை வெட்டுவதுடன் கடற்கரை ஓரங்களில் வாழும் மக்களை ஏனைய கிராமங்களில் உள்ள உறவினர் வீடுகளுக்குச் சென்று தங்குமாறும் புயல் வெள்ளம் ஆகியன வருமுன்காத்தல் தொடர்பான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி முன்னேற்பாடு தொடர்பான அறிவித்தலை வங்காலை புனித ஆனாள் தேவாலய ஒலிபெருக்கி மூலமும் அறிவிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (மி)

# சனாதிபதி விரும்பினால் புலிகளுடன் பேசலாமாம்

-விமல்வீரவன்ச கூறுகிறார்

(கொழும்பு)

சனாதிபதி விரும்பினால் தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக் கால தன்னாட்சி அதிகார சபைத் தொடர்பில் அவர் பேச்சுக்களை ஆரம்பிக்கலாம் என ஜே.வி.பி தெரிவித்துள்ளது. ஜே.வி.பியின் பிரச்சாரச் செயலர் விமல்வீரவன்ச இந்தக் கருத்தை பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சந்தேசியவுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

தேச இத்தைசி எனப்படும் தேசப்பற்றாளர் இயக்கத்தின் பிரச்சார நடவடிக்கைகளுக்காக விமல் வீரவன்சவும் எல்லே குணவன்சவும் லண்டனுக்குச் சென்றுள்ளனர். அங்கு அவர்கள் பல கூட்டங்களில் இலங்கையின் நிலவரம் குறித்து தமது கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்கள்.

இதனிடையே விமல்வீரவன்ச சந்தேசிக்கு வழங்கிய செவ்வியில், சனாதிபதி ஜே.வி.பியின் ஆட்சேபனையை பற்றிப் பெரிது படுத்தாவிட்டால் அவர் தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி தொடர்பில் பேச்சுக்களை ஆரம்பிக்கலாம் சில ஊடகங்கள் சனாதிபதி இடைக்காலத் தன்னாட்சியை அடிப்படையாகக் கொண்டு பேச்சு நடத்த விரும்புவதாகத் தெரிவு செய்யப்பட்ட செய்திகளை மட்டும் பிரசுரித்து வருகின்றன.

சனாதிபதி அவ்வாறு இடைக் கால தன்னாட்சியை அடிப்படையாகக் கொண்டு பேச்சு நடத்த விரும்புவாராக இருந்தால், நோர்வேயின் வெளியுறவு அமைச்சர் ஜோன்பீற்றர்சன் ஏன் வெறுங்கையுடன் திரும்பினார் என விமல் வீரவன்ச கேள்வி எழுப்பினார். ஜே.வி.பி, சமாதான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கத் தடையாக உள்ளதாகவும் அதற்காக அந்தக் கட்சி மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும் எனவும் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த கருத்தைத் தெரிவித்த விமல் வீரவன்ச ஜே.ஆர்.ஜெயவர்த்தன காலத்தில் இருந்து ரணில் விக்கிரமசிங்க வரை போர் நிறுத்த உடன்படிக்கையை செய்துகொண்டது வரையான பிழைகளுக்காக ஐக்கிய தேசிய கட்சியே மன்னிப்பு கோர வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

## வெளிச்சம் சஞ்சிகையின் 88 ஆவது இதழ் இன்று வெளிவருகிறது

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தின் கலை, இலக்கிய சமூக இதழான வெளிச்சத்தின் எண்பத்து எட்டாவது இதழ் இன்று வெளிவருகின்றது.

இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்த தினத்தையொட்டிய கவிதையுடன், மாலிகா, கல்வயல் வே.குமாரசாமி, புதுவை இரத்தினதுரை, யாழ்பாடியார், க.சந்திரா, வேல்.லவன் ஆகியோரின் கவிதைகளுடன் வின்சன் புளோரன்சின் மொழி பெயர்ப்புக் கவிதையும், சிதம்பர திருச்செந்திநாதன், தாட்சாயிணி, கலாநிதி சோமஸ்கந்தன், க.சட்டநாதன் ஆகியோரின் சிறுகதைகளும் இடம்பெற்றுள்ளன. அத்துடன யதீந்திராவின் கட்டுரையுடன் ஞானரதனின் தொடர் கட்டுரையும், மயிலங்கூடலூர் பி.நடராசனின் நேர்காணல், பதிவுகள், குறிப்புகளுடன் இன்னும் பலவும் இடம்பெற்றிருக்கின்றன.

### அ'புரத்தில்...

50 மீற்றர் சென்றபோது இவ் வாகனத்தின் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.இதன் போது வானின் பின் ஆசனத்தில் அமர்ந்து பயணித்த கோண்டாவிலைச் சேர்ந்த இராமலிங்கம் சுப்பிரமணியம் என்பவர் தலையில் சூடுபட்டு இறந்துள்ளார். அனுராதபுரம் சிங்களப் பிரதேசம் ஆகையால் வாகனத்தை நிறுத்தாத சாரதி தொடர்ந்து வாகனத்தைச் செலுத்தி வந்து வவுனியா பொலிஸ் நிலையத்தில் நிறுத்தியுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையத்திற்குச் சென்று வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் விசாரணைகளை மேற்கொண்டார். சடலம் மேலதிக பரிசோதனைகளுக்காக வவுனியா பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (10)

## மிகச்சிறப்புற நடைபெற்ற வட்டக்கச்சி ம.வி.பொன்விழா

(வட்டக்கச்சி)

கிளிநொச்சி வட்டக்கச்சி மகாவித்தியாலய பொன்விழா நிகழ்வு நேற்று வெகுசிறப்பாக நடைபெற்றது.

நேற்றுக்காலை 8.30 மணிக்கு வித்தியாலயத்திற்கு முன்பாகவுள்ள கிறிஸ்தவ தேவாலயத்திலிருந்து பாண்ட்வாத்திய அணிவகுப்போடு



விருந்தினர்கள் அழைத்து வரப்பட தமிழ்த் தேசியக் கொடியேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது.

நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக வித்தியாலய பொன் விழா நூல் வெளியீடும் இடம் பெற்றது இந்நூலினைக் கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் அரியரத்தினம் அவர்கள் வெளியிட்டுவைக்க, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் இராசநாயகம் அவர்கள் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து வித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்வுகளும், சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றது. வித்தியாலய அதிபர் சி. சந்திரராசா அவர்களின் நலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கரைச்சிப்பிரதேச சபை வி[illegible] ஆணையாளர் பொன் நித்தியானந்தன் தமிழீழ மாணவர் அமைப்பு பொறுப்பாளர் நளன், கிளிநொச்சி மாவட்ட மாணவர்அமைப்புப்பொறுப்பாளர் ஈழப்பிரியன் ஆகியோர் உட்பட மதகுருக்கள், பழையமாணவர்கள் பொதுமக்கள், கல்விசார் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொ[illegible]டு சிறப்பித்தனர்.

இப்பொன் விழா நிகழ்வின் இறுதி நிகழ்வாக கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (12)

### பேச்சுக்கள்..

என நேற்று விடுதலைப் புலிகளின அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்துப் பேசிய பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார். மேலும் அவர் இந்தக் கருமங்களில் இன்னும் கூடுதலாக தீவிரமாக செயற்படுவதற்கு சில முடிவுகளைச் செய்திருக்கிறோம். மாவட்ட ரீதியாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பினுடைய அலுவலகங்களைத் திறப்பதற்கு நாங்கள் முடிவுசெய்திருக்கிறோம். முதல் கட்டமாக திருகோணமலையில் தலைமை அலுவலகம் திறக்கப்படும். திறக்கப்பட்டபின் தொடர்ந்து மற்ற மாவட்டங்களிலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினுடைய அலுவலகங்கள் திறக்கப்படும். இலங்கை, இந்தியப் பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பாக கருத்து தெரிவித்தவேளை தமிழர்களுக்கும் இந்தியாவுக்கும் இடையில் ஒரு சந்தேக நிலைப்பாட்டை ஏற்படுத்தக்கூடிய வகையில் சில காலமாக சிறிலங்கா அ[illegible] செயற்பட்டு வந்திருக்கின்றது. இந்தியா தமிழருக்கு மாறாக ஒரு போதும் செயற்படமுடியாது செயல்படக் கூடாது. எனென்றால் இந்தியாவுடன் தொடர்ந்து ஒரு இணக்கமான நிலைப்பாட்டில் இருக்கத்தான் தமிழ் மக்கள் விரும்புகின்றார்கள். அதைத் தான் இந்தியாவின் தமிழ் நாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்கள் மாத்திரமல்ல இந்தியாவில் வாழ்கின்ற சகல மக்களும் விரும்புவார்கள் என்றும் தெரிவித்தார்.

### சனாதிபதி...

பில் அரசியல் துறைதுணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தமிழீழ அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி, மற்றும் மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

தமிழர் கூட்டமைப்பின் தலைவர் இராசமபந்தன் தலைமையில் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

திட்டமிடல் செயலகத்தில் காலை 10.00 மணிக்கு ஆரம்பமான சந்திப்பு நிகழ்வு நண்பகல் 12.45 வரை இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இன்றைய சந்திப்புப்பற்றிய கேள்விக்குப் பதிலளித்த அரசியல் துறைப்பொறுப்பாளர், வழமையாக தமிழ்க் கூட்ட மைப்பும், தமிழீழ விடுதலைப்புலிகளும் மாதாந்தம் சந்திக்கின்ற ஒழுங்கில் சந்தித்தோம் இச்சந்திப்பின் போது எங்களுடைய அரசியல் நிலைப்பாடுகள் சம்பந்தமாகவும், அண்மையில் எமது தேசியத்தலைவருடன் நோர்வே உயர்மட்டக்குழு கலந்துரையாடி அதில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் குறித்தும், அதனைத் தொடர்ந்து யப்பான் தூதுக்குழு வினருடன் நாங்கள் கலந்துரையாடிய விடயங்கள் குறித்தும் மற்றும், ஐரோப்பிய நாடுகளின் விஜயத்தின் பொழுது சர்வதேச சமூகத்தினுடைய நிலைப்பாடுகள் சம்பந்தமாகவும், கலந்துரையாடினோம் இதன்போது பல முக்கியமான தீர்மானங்களையும் எடுத்துள்ளோம். இந்த வகையில் இச்சந்திப்பானது மிகவும் ஆக்க பூர்வமாக விருந்தது.

இன்றைய கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பற்றிக் குறிப்பிடுகையில்.

முக்கியமாகத் தற்பொழுது சமாதானப் பேச்சுக்கள் சம்பந்தமாக சனாதிபதியும், அரசாங்கமும் எடுத்திருக்கின்ற நிலைப்பாடு பற்றியது.

தமிழீழ விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரையிலும், தமிழ் தேசியக்கூட்டமைப்பைப் பொறுத்த வரையிலும், மிகவும் உறுதியான நிலைப்பாட்டிலேயே தொடர்ந்தும் இருக்கின்றோம். தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கக் கூடிய, தமிழ் மக்களின் ஆணையின் அடிப்படையில் எங்களால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை என்ற வரைபின் அடிப்படையில் பேச்சுவார்த்தை மேசைக்குப்போக தமிழீழ விடுதலைப்புலிகள் தயாராக இருக்கிறார்கள் என்பதை நாங்கள் தொடர்ந்து சர்வதேச சமூகத்திற்கு வலியுறுத்துகின்ற தீவிர செயற்பாட்டில் இறங்க இருக்கின்றோம். தமிழ்தேசிய கூட்டமைப்பும் சர்வதேச சமூகத்திற்கு தங்களுடைய நிலைப்பாட்டை வெளிப்படுத்த இருக்கின்றார்கள் இது முக்கியமான முடிவு.

அடுத்தகட்ட நடவடிக்கை குறித்துத் தெரிவிக்கையில் எங்களைப்பொறுத்தவரையில் நாங்கள் தொடர்ந்தும் இது குறித்து தொடர்ச்சியாக சர்வதேச சமூகத்திற்கு எடுத்து விளக்க இருக்கின்றோம். ஏனெனில் தமிழீழ விடுதலைப்புலிகள்தான் இந்தப் பேச்சுவார்த்தை தொடங்குவதற்குத் தடையாக இருப்பதாகவும், பேச்சுவார்த்தை இழுபட்டுச் செல்வதற்கு காரணமாக இருப்பதாகவும் சர்வதேச அளவில் சிறிலங்கா அரசாங்கம் பிரச்சாரப்படுத்தி வருகின்றது. இதிலே எந்த உண்மைத் தன்மையும் இல்லை. தமிழீழ விடுதலைப் புலிகள் உடனடியாக பேச்சுக்களைத் தொடங்குவதற்குத் தயாராக உள்ளனர் என்பதைத் தொடர்ந்தும் சர்வதேச சமூகத்திற்கு தெரிவிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்க இருக்கின்றோம். இதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு, முழுமையாகவும் தீவிரமாகவும் செயற்பட இருக்கின்றது.

கடந்த வாரம் நோர்வே வெளியுறவு அமைச்சரினூடாக இலங்கை அரசாங்கத்திற்கு நீங்கள் அனுப்பிய தகவல்குறித்துத் தெரிவிக்கையில்,

முக்கியமாக நாங்கள் எங்களுடைய தேசியத்தலைவர் அதாவது நாங்கள் ஏற்கனவே எங்களுடைய நிலைப்பாட்டை விளக்கியதும், நாங்கள் எந்த நிபந்தனையும் இல்லாது இடைக்கால அதிகார சபை என்ற வரைபை அடிப்படையாகக் கொண்டு பேசுவதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதனையும், சிறிலங்கா அரசாங்கம் தன்னுடைய கூட்டுக் கட்சிகளையும் இந்த சமாதான முன்னெடுப்புகளுக்கு முழு ஆதரவைத் தெரிவிக்கும் வகையில் அவர்களையும் ஒன்றிணைத்து ஒருமுகப்படுத்தப்பட்ட தீர்மானத்தை எடுத்து ஒரு நிலைப்பாட்டை அறிவிக்கும் படியுமே நாங்கள் கோரியிருக்கின்றோம். ஏனெனில் சனாதிபதி அவர்கள் முயற்சிகளில் ஈடுபாடு மாதிரியான ஒரு தொழிற்பாட்டைக் காட்டினாலும் ஜே.வி.பி.போன்ற அமைப்புக்கள் இன்று அரசாங்கத்தில் பங்கெடுக்கின்ற கூட்டுக் கட்சிகள் என்ற வகையில் ஜே.வி.பி.யும் ஏனைய கட்சிகளும் பகிரங்கமாக இந்த சமாதான முன்னெடுப்புக்களை எதிர்த்து வருகிறார்கள். இந்தசசூழ்நிலையில் இந்தச் சமாதான முன்னெடுப்புக்களை சனாதிபதியை மட்டும் நம்பிக்கொண்டு நாங்கள் செல்ல முடியாது. ஆகவே அரசாங்கத்தில் இருக்கின்ற ஏனைய கட்சிகளையும் இணைத்து ஒரு தீர்க்கமான முடிவை எடுத்து அதை வெளிப்படுத்த வேண்டும். என்கின்ற ஒரு செய்தியையும் நாங்கள் அவர்களுக்கு சனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்லும்படி அறிவுறுத்தியிருக்கின்றோம்.

ஆயினும் அரசாங்கத்திடமிருந்து இதுவரை அனுசரணையாளரூடாக எந்த விதமான சாதகமான பதிலும் எட்டவில்லை. இந்தியாவின் உதவியுடன் பலாலி விமானத் தளத்தில் அபிவிருத்தி செய்யப்பட்டு வருவதாகச் சொல்லப்படுவது பற்றித் தெரிவிக்கையில்:

எங்களுடைய நிலைப்பாடு நாங்கள் ஏற்கனவே தெளிவுபடுத்தியிருக்கின்றோம். இந்தியா ஒருதலைப்பட்சமாக இலங்கை அரசாங்கத்தோடு தமிழர் தாயகப்பகுதியில் எந்த விதமான ஒப்பந்தங்கள் செய்வதையும் தமிழீழ விடுதலைப் புலிகளோ தமிழ் மக்கள் சார்பாக எவருமோ அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அது நிச்சயமாக இலங்கை அரசாங்கத்தினுடைய ஒரு உத்தி.

தமிழ் மக்களுக்கும் இந்திய அரசாங்கத்திற்கும் இடையில் ஒரு இடைவெளியை ஏற்படுத்துகின்ற ஒரு முரண்பாட்டை ஏற்படுத்துகின்ற உத்தியாகவே நாங்கள் இதைப் பார்க்கின்றோம். இது பற்றி மக்கள்கூட தங்களுடைய கருத்துக்களை வெளிப்படுத்தி வருகிறார்கள். ஆகவே எங்களுடைய தமிழ் மக்களுடைய அபிலாசைகளை அவர்களது நலன்களுக்கு விரோதமாக இந்திய மத்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்தோடு ஒரு தலைப்பட்சமான நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது என்பது எங்களுடைய நிலைப்பாடும் எதிர்பார்ப்பும் ஆகும்.

புலிகளின் எதிர்பார்பைப் பற்[illegible] குறிப்பிடுகையில் நாங்கள் அனுசரணையாளர்களுடாக ஏதாவது ஒரு சாதகமான பதில் கிடைக்குமா என்பதை எதிர்பார்த்து காத்திருக்கின்றோம். அது பற்றி நான் இப்பொழுது முடிவு சொல்ல முடியாது. எதிர் காலத்தில் எங்கள் தலைமைப் பீடம் இது பற்றி ஒரு தீர்க்கமான முடிவு எடுக்கும் என நம்புகின்றேன். என்றார். (சோ.சு)

### சமாதானப்..

பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு விருப்பமா? இல்லையா? என்பதை இம் மாதத்தில் விடுதலைப்புலிகள் அறிவிக்க வேண்டும். இனப் பிரச்சினை தொடர்பாக நாட்டின் இரண்டு பிரதான கட்சிகளும் முதற் தடவையாக ஒரு இணக்கப்பாட்டை எட்டியுள்ளது. அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளிடையே உடன்பாடு இல்லை என்று விடுதலைப் புலிகளினால் தெரிவிக்கப்பட்டுவருவது ஏற்கக் கூடியது அல்ல. சகல கட்சிகளும் ஒரே நிலைப்பாட்டைக் கொண்டுள்ளன. பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நான் தயாராகவிருக்கின்றேன் என்று தெரிவித்துள்ளார்.


## கண்ணீர் அஞ்சலி

அரமர் சின்னத்தம்பி இராசதுரை

(விவசாய ஆராச்சி நிலையசாரதி)

சின்னத்தம்பி இராசதுரை அவர்களின் மறைவுச் செய்திகேட்டு ஆழ்ந்த கவலையடைகிறோம். ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பொறுப்பதிகாரி,
சகபணியாளர்கள்,
விவசாயஆராச்சி நிலையம்,
கிளிநொச்சி.

(5282)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.